உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-143

ஆகஸ்ட் 1-15, 2022

விருப்ப சந்தா இதழ்




திருமுறை பாடல் பாடி வழங்கப்பட்ட சுதந்திரச் செங்கோல்

## சதுரங்க விளையாட்டு வீரனான முருகன்

## சதுரங்கம் விளையாடி அம்பாளை மணந்த சிவன்

## சிவனுக்கு அறுகம்புல் சார்த்தி முக்தி பெறலாம்



அறுகுமூ விலைக்கொ ழுந்தை
அரன் றனக் கணிந்தோர் என்றும்
பெறலரிதான போகம்
பெற்றுவாழ்ந்திருந்த பின்னர்
மறிமழுத் தரித்தோன் போல
வடிவுடை யவராய் மன்னி
உறுபொருளாகும் முத்தி
உற்றின்பம் உறுவர் மாதோ

**உரை:** அறுகம் புல்லினது மூன்று இலையாய் உள்ள கொழுந்தைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், யாரும் பெறுதற்கரிய போகங்களைப் பெற்றுநெடுநாள் வாழ்ந்த பிறகு சிவசாரூபம் பெற்றிருந்து, பின்பு முடிவாக அடையத் தக்க பரமுத்தியை அடைவார்கள்.

**குறிப்பு:** 'கொழுந்து' என்றதனால், உச்சியில் உள்ளதையே கொய்யவேண்டும் என்பதும், 'மூவிலை' என்றதனால் அது மூன்று இலையாகவே இருக்கும்படி கொய்யவேண்டும் என்பதும் விளங்கும்.



## ஊர் என்றால் எவ்வாறு இருக்கவேண்டும்

திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திரு வெண்ணீறணியாத திருவிலுரும்
பருக்கோடி பத்திமையால் பாடாவூரும்
பாங்கினோடு பத்திகள் இல்லாவூரும்
விருப்பொடு வெண்கொடியும் இல்லாவூரும்
நிதானமும் வெண்கொடி இல்லாவூரும்
அருப்பொடு மலர்பறித்திட்டு (உ)ண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

**விளக்கவுரை**

- சிவாலயம் இல்லாத ஊர்,
- திருவெண்ணீற்றை விரும்பி அணியாத மக்கள் வாழும் ஊர்,
- உடம்பு வணங்கிப் பக்தியால் பாடல்களைப் பாடாத ஊர்,
- பல ஆலயங்கள் இல்லாத ஊர்,
- மங்கல நிகழ்ச்சியின் போது பந்தல் அமைத்து வெண்சங்கு ஊதாத ஊர்,
- உண்பதற்கு முன் இறைவருக்கு மலர் பறித்து சாத்திவிட்டு உண்ணாத ஊர்,

**இவையெல்லாம் ஊர்கள் அல்ல அவையாவும் மிருகங்கள் வாழ்கின்ற காடு என்கிறார் திருநாவுக்கரசர்.**

## யோகிகளுக்கு மட்டும் காட்சியளிக்கும் கரும்பு வில்




சங்கரன்கோவில் ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி கோவிலில் உள்புறம் தனி தங்கக்கொடிமரத்துடன் தனி கோவிலாக கிழக்கு நோக்கி அமைந்துள்ளது ஸ்ரீ கோமதி அம்மன் கோவில். தனி நந்தி பலிபீடம் அமைத்துள்ளது. ஸ்ரீ கோமதி அம்மன் அழகே உருவானவளாக ஸ்ரீசக்ர பீட பஞ்ச பிரம்மாசனத்தின் மேல் வலது இடை நெளிந்து, வலது கையில் மலர்பாணம் மற்றும் பூச்செண்டு எந்தியவளாக, இடது கையை பூமியைநோக்கி தளரவிட்டவளாக இளமங்கை கோலத்தில் புன்னகை பூத்த முகத்துடன் சர்வாலங்கார பூசிதையாக கருணை பொங்க காட்சி தருகிறாள். மேலும் இது தசமஹா வித்யா பீடத்தில் சோடஷி பீடமாகும். அன்னை சோடஷி ரூபமாக ஸ்ரீ லலிதாமஹா திரிபுர சுந்தரியாக, கமேஸ்வரியாக காட்சி தருகிறாள். அன்னையின் நான்கு கரங்களில் பாசம் அங்குசம் வைத்துள்ள மேல் இரு கைகளும் மற்றும் கரும்பு வில்லும் இங்கு அரூபமாக உள்ளன. அவற்றை நாம் நம் கண்களால் காண முடியாது என்றும், தவ வலிமை பெற்ற யோகிகளால் மட்டுமே அவற்றை காண முடியும் என்றும், யாருக்கு அந்த தரிசனம் கிடைக்கபெறுகிறதோ அவர்களுக்கு அஷ்டமா சித்திகளும் வசப்படும் என்றும் கூறப்படுகிறது.

# ஆடிமாதத்தில்

# கோமதி அம்மனுக்கு காட்சிதந்த சிவபெருமான்



தந்தையாகிய தட்சனால் அவமதிக்கப்பட்ட தாட்சாயிணி அந்த யாகம் அழியுமாறு சபித்து விட்டு, தட்சன் தந்த உடல் தனக்கு வேண்டாமென தட்சன் நடத்திய யாகத்தின் தீயிலேயே எரிந்து போகிறாள். சிவனால் படைக்கப்பட்ட வீரபத்திரர் அந்த யாகத்தை அழித்தார். மனைவி இறந்த வருத்தத்தில், சிவன் தன் மனைவி தாட்சாயிணியின் இறந்த உடலை எடுத்துக் கொண்டு ஊழித்தாண்டவம் ஆடினார்.

சிவனின் ஆட்டத்தை நிறுத்த விஷ்ணு தன் சக்ராயுதத்தால் தாட்சாயிணியின் உடலை 51 துண்டுகளாக வெட்டி வீழ்த்தினார். பிறகு சிவன் சாந்தமானார். சிதறிய தாட்சா யிணியின் உடல் பகுதிகள் விழுந்த 51 இடங்கள் பிரதான சக்தி பீடங்களாயின. அந்த உடல் பாகங்களில் இருந்து ரத்தம் , சதை பாகங்கள் தெறித்து விழுந்த பகுதிகள் உப சக்தி பீடங்கள் ஆயின.

அந்த வகையில் அம்பிகையின் நெற்றியின் உள்பகுதி, அதாவது **குண்டலினி எழும்பி பாம்பு போல் படம் விரித்து ஆடும் பகுதியான சஹஸ்ராரம் விழுந்தபகுதிதான் சங்கரன்கோவிலில் அமைந் துள்ள ஸ்ரீ கோமதி அம்மன் சன்னதி ஆகும்.**

அன்னை பராசக்தி கோமதி அம்பிகை ஹரியும் ஹரனும் ஒன்றே என்ற தத்துவத்தை உணர்த்த, ஸ்ரீ சங்கர நாராயண கோலம் காண இந்த ஸ்தலத்தில் தவம் இயற்றினாள்.

ஆடி பௌணமி உத்தராட நக்ஷத்திர தினத்தில் ஸ்ரீ சங்கர நாராயண தரிஷனம் அன்னை கோமதிக்கும், சங்கன், பதுமன் ஆகியோருக்கும் கிடைத்தது.

இதை உணர்த்தும் விதமாக இங்கே ஆடி தபசு பிரம்மோத் சவம் ஆடி மாதத்தில் கொண்டாடபடுகிறது. இவ்விழாவில் அன்னை கோமதிக்கு தங்ககொடிமரத்தில் கொடியேற்றம் செய்யப்பட்டு 10 நாட்கள் அன்னையே காலையிலும் மாலை யிலும் இரவிலும் வீதி உலா கண்டருள்கிறாள்.

அம்பலவாணதேசிகர் ஓர் மந்திரச் சக்கரத்தைப் பதித் துள்ளார். அந்த சக்கர பீடத்தில், அம்மனுக்கு வழங்கப்படும் நைவேத்தியங்களில் மாவிளக்கு முக்கியத்துவம் பெறுகிறது. கோவிலுக்கு வருவோர், தங்கம், பித்தளை, வெண்கலச் சாமாங்கள், துணி, ஆடு, கோழி, உப்பு, மிளகாய், மிளகு, காய்கறிகள், பலவகைத் தானியங்கள் மற்றும் பாம்பு, தேள் ஆகிய வற்றின் வெள்ளியால் செய்யப்பட்ட சிறு தகடுகளை

காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

11ஆம் நாள் இறைவன், இறைவிக்கு சங்கரநாராயண கோலத்தில் காட்சியளிக்கிறார். மேலும் இது அன்னையின் சஹஸ்ராரம் விழுந்த ஸ்தலமாகையால் அன்னை இங்கே மஹா யோகினியாக, தபஸ் ஸ்வரூபி ணியாக காட்சியளிக்கிறாள். அம்பிகை சன்னதியின் முன்பு ஆக்ஞா சக்கரம் பதிக்கப்பட்டுள்ளது. இதில் அமர்ந்து பக்தர்கள் நினைத்த காரியம் நிறைவேற வேண்டிக்கொண்டு பயனடைகிறார்கள். மேலும் மனநிலை சரியில்லாதவர்கள், பேய் பிசாசு மற்றும் துர்சக்தியால் பீடிக் கப்பட்டவர்கள் இந்த சக்கரத்தின் மேல் அமர்ந்து குணமடைந்து செல்வது கண்கூடு. இங்கு அம்பிகையின் புற்றுமண் பிரசாதம் வெகுசிறப்பு. இதை உண்டால் வயிற்றுவலி மற்றும் உடல்வியாதிகள் தீரும் என்பது அனேக பக்தர்களின் நம் பிக்கை.



குழந்தை வரம் வேண்டியும் பிரார்த்தனைகள் நடக்கிறது. இங்கேதான் 18 சித்தர்களில் ஒருவரான பாம்பாட்டி சித்தர் ஜீவ சமாதி அமைத்துள்ளது.

பாம்பாட்டி சித்தர் கோமதி அம்மனை வாளைகுமாரி யாகவும், குண்டலினி சக்தியாகவும், பாம்பு வடிவ மாகவும் வழிபட்டிருக்கிறார். எனவே காளஹஸ்திக்கு அடுத்தபடியாக இது கால சர்ப்ப தோஷம் போக்கும் ஸ்தலமாகவும், ராகு கேது தோஷம் நீக்கும் ஸ்தல மாகவும் விளங்குகிறது. செவ்வாய் தோஷத்தை நீக்கி திருமணத்தடை அகற்றும் ஸ்தலமாகவும் சங்கரன்கோவில் விளங்குகிறது.

கோவிலில் ஆறு கால பூஜைகள் நடக்கிறது. சுவாமிக்கு நடக்கும் அத்தனை பூஜை உபசார னைகளும் அம்பிகைக்கும் நடக்கிறது. அம்பிகை கோவிலில் தங்க ஊஞ்சல் உள்ள பள்ளியறை உள்ளது. பள்ளிஎழுச்சி பூஜை முடிந்த பின் முதல் பெரிய தீபாராதனை அம்பிகைக்கே முதலில் நடக்கிறது.

வொவ்வொரு தமிழ் மாத பிறப்பன்றும் கோமதி அம்பிகையின் தங்க ரத உலா நடக்கிறது. திங்கள் கிழமை மலர்ப்பாவாடையும், செவ்வாய்கிழமை வெள்ளிபாவாடையும், வெள்ளிகிழமை தங்க பாவாடையும் அம்பிகைக்கு சார்த்தபடுகிறது.



கீதா-ராஜன்

வொவ்வொரு பவுர்ணமி அன்றும் அம்பிகைக்கு நவாவர்ண பூஜை நடைபெறுகிறது. தினமும் லலிதா சஹஸ்ரநாம அர்ச்சனை நடக்கிறது. சிறப்பு நாட்களில் அம்மனுக்கு சந்தனக் காப்பு நடக்கிறது. கோமதி அம்மனுக்கு தினமும் காலையிலும், உச்சி வேளை யிலும், மாலை பூஜையிலும், இரவு பள்ளியறை பூஜைக்கு முன்பும், 4 வேலைகள் அபிஷேகம் நடக்கிறது. இங்கு தங்கம், வெள்ளி காணிக்கை செலுத்துவதும், முடி காணிக்கையும், மாவிளக்கு போட்டு பிரார்த்தனை செய்வதும் பிரதானமாக உள்ளது.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



# துர் சக்திகளை விரட்டி வீட்டிலேயே தெய்வீக சக்தியை வரவழைக்கும்

## வாசனைப் பொடியும் தயாரிப்பு முறையும்

வீடுகளில் தெய்வீக மணம் இருந்தால், லட்சுமி கடாட்சம் பெரும், இதற்கு பல்வேறு வாசனை திரவியங்களைப் பயன்படுத்தியிருப்போம், ஆனால் கோவில்களுக்கு உள்ளே செல்லும்போது ஒரு தெய்வீக நறுமணம் வீசும்.

கோவிலில் வீசும் இந்த மணம் ஒருவித ஈர்ப்பு சக்தியை அதிகரிக்கும், இந்த வாசம் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பொருட்களின் வாயிலாகவே ஏற்படுவதாக இருந்தாலும், இதுபோன்ற வாசத்தை வீட்டில் வரவழைப்பது மிக சிரமமாகும்.

கோவிலில் மணக்கும் அந்த வாசத்தை, ஒருசில பொருட்களை வைத்து வீட்டிலேயே தயாரிக்கலாம். இந்த பூஜை பொடியை தயாரிப்பது வெகு சுலபமாகும்.

இந்த பூஜை பொடியை தயார் செய்து பூஜை அறையில் பயன்படுத்தி பாருங்கள். தெய்வீக மணம் உங்களுடைய வீட்டிலும் எப்போதும் வீசிக்கொண்டே இருக்கும்.

இனம் புரியாத ஒரு மன அமைதி, நிம்மதி என்பது கோவிலுக்கு சென்றால் நம்மை அறியாமலேயே நம் மனதிற்குள் ஏற்படும் அல்லவா.

அதே போல உங்களுடைய வீட்டிலும் நீங்கள் எப்போதும் சந்தோஷமாக இருக்கலாம். இந்தப் பொடியின் வாசத்தால் மனதும் புத்துணர்ச்சியடையும். அந்த அளவிற்கு அற்புதமான நறுமணத்தை கொடுக்கக் கூடிய இந்த பூஜை பொடியை எவ்வாறு தயாரிப்பது என்பதை பார்ப்போம்?



## தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கிராம்பு | 2 ஸ்பூன் |
| ஏலக்காய் | ஸ்பூன் |
| சோம்பு | ஸ்பூன் |
| சந்தன பொடி | 2 ஸ்பூன் |
| மஞ்சள் பொடி | 3 ஸ்பூன் |
| ஜவ்வாது | 1/2 ஸ்பூன் |
| பச்சை கற்பூரம் | 1 ஸ்பூன் |
| வெட்டிவேர் | 2 ஸ்பூன் |

## தயாரிக்கும் முறை

வெட்டிவேரை சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி போட்டுக் கொள்ளுங்கள். (உங்களுக்கு பூஜை பொடி இன்னும் கொஞ்சம் அதிகமாக தேவை என்றால் இந்த பொருட்களை எல்லாம் இன்னும் கொஞ்சம் கூடுதலாக சேர்த்து கூட அரைத்துக் கொள்ளலாம். தேவைக்கு ஏற்ப பொருட்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.

மேற்கண்ட பொருட்களை மிக்ஸி ஜாரில் போட்டுவிட்டு, நன்றாக பவுடர் போன்று நைசாக அரைத்துக் கொள்ளுங்கள்.

ஏலக்காய், சோம்பு, வெட்டிவேர், இவை கொஞ்சம் திப்பி திப்பியாகத்தான் இருக்கும். ஒரு சல்லடையில் போட்டு இதை சலித்து பொடியை மட்டும் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இந்த பொடியை காற்று வெளியே செல்லாத ஒரு பாட்டிலில் போட்டு மூடி வைத்தால் அப்படியே நறுமணத்தோடு இருக்கும். தேவையான போது தேவையான அளவு எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

## எப்படி பயன்படுத்துவது?

இந்த பூஜைப் பொடியை சிறிதளவு ஒரு சிறிய கிண்ணத்தில் போட்டு பன்னீர் ஊற்றி குழைத்து பூஜை பொருட்களுக்கு பொட்டு வைக்க பயன்படுத்தலாம். நிலை வாசலில் பொட்டு வைக்க இந்த பொடியை பயன்படுத்தலாம். சுவாமி படங்களுக்கு பொட்டு வைக்கவும் இந்த பொடியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

வீடு துடைக்கும் போது அந்த தண்ணீரில் இந்த பொடியை கொஞ்சமாக போட்டு கலந்தும் வீடு துடைக்கலாம். வீடு முழுவதும் தெய்வீக வாசனை எப்போதும் நிறைந்திருக்கும். செவ்வாய்க் கிழமை வெள்ளிக்கிழமையில் நிலைவாசல் தெளிக்கும் போது அந்த தண்ணீரில் கொஞ்சமாக இந்த பொடியை கலந்து நிலை வாசலில் தெளித்தால் வீட்டிற்கு அவ்வளவு லட்சுமி அம்சம் கிடைக்கும்.

## இந்தப்பொடியின் பலன்

- இந்த பூஜைப் பொடியை வீட்டில் பயன் படுத்தினால், அத்தனை தெய்வங்களும் தேவதை களின் அம்சமும் உங்களுடைய வீட்டில் சேர்ந்து நிற்கும்.
- வீட்டில் இல்லாத தெய்வ சக்திகூட நிலை யாக வந்து நிரந்தரமாக குடிகொள் ளும்.
- உங்கள் வீடே கோவிலாக மாறும்.
- வீட்டில் சண்டை சச்சரவுகள் இருக்காது.
- கண் திருஷ்டியால் பெரிய பாதிப்புகள் ஏற் படாது.
- கண்ணுக்கு தெரியாத எந்த கெட்ட சக்தி யாலும் வீட்டிற்குள் நுழைய முடியாது.



# சிவ உருவ மூர்த்தங்களும் அவற்றின் சிறப்புகளும்

## நடராஜர்:



ஐந்தொழில் புரிவதை உணர்த்தும் வகையில்வல மேற் கரத்தில் படைப்புத் தொழிலைக் குறிக்கும் உடுக்கை, இட மேற்கரத்தில் அழித்தலை குறிக்கும் அக்னி, வலது கீழ் அபய கரம் காத்தல் தொழிலையும்,முயலகன் மேல் ஊன்றிய பாதம் திரேதம் என்னும் மறைத்தல் தொழிலையும், தூக்கிய குஞ்சித பாதம் முக்திக்குக் காரணமான அருளல் தொழிலையும் குறிக்க ஆனந்த தாண்டவ நடராஜராக சிவகாம சுந்தரியுடன் யோக மூர்த்தமாக அருள் பாலிக்கின்றார்.

## தக்ஷிணா மூர்த்தி:



நால்வருக்கும் உண்மைப் பொருளை சின் முத்திரையாலேயே சொல்லாமலேயே உணர்த்தியஆதி குரு. கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த கோலம். சிவாலயங்களில் கோஷ்டத்தில் தெற்கு நோக்கி அமைக்கப்படும் மூர்த்தம். வலக்கையிலே சின்முத்திரை மற்றும் நாகம், இடக்கரத்தில் ஏடு, அக்னி. சுகாசனத்தில் வலக்கால், அறியாமைகொண்ட முயலகனை மிதிக்கும் கோலம். யோக மூர்த்தம்.

## சோமாஸ்கந்தர்:



வலப்புறத்தில் அமர்ந்த கோலத்தில் ஐயனும், இடப்புறத்தில் அம்மையும் நடுவில் ஸ்கந்தனும் விளங்க காட்சி தரும் திருக்கோலம். ஐயனின் திருக்கரங்களில் மானும் மழுவும், அம்மையின் கையில் மலரும். தியாக ராஜ மூர்த்தமாக ஸப்த விடங்க ஸ்தலங்களில் அருள் புரிபவரும் இவரே. பிரம் மோற்சவ காலங்களில் சிவ பெருமானாக எழுந்தருள்பவரும் சோமாஸ்கந்த மூர்த்தமே. உமையம்மையுடன் கூடியதால் போக மூர்த்தம். மஹா விஷ்ணுவானவர் பிள்ளை வரம் வேண்டி தன் மார்பிலே வைத்து அஜபா நடனத்தால் பூசித்து மன்மதனை பெற்ற மூர்த்தம்.

## சந்திரசேகரர்:



சந்திரன் தட்சனின் 27மகள்களை மணம் புரிந்தாலும், அவன் ரோகிணியிடம்மட்டும் மிக்க அன்புடன்இருந்து மற்ற மனைவியர்களை புறக்கணித்தான். அதனால் மனம் நொந்த மற்ற பெண்கள் தன் தந்தையான தட்சனிடம் முறையிட அவனும் சந்திரனுக்கு சாபம் அளித்தான், அதனால் அவன் தன் பதினாறு கலைகளையும் இழந்து குஷ்ட நோயால் பீடித்தவனானான். பின் சோம வார விரதம் இருந்து எம்பெருமானால் சாப விமோசனம் பெற்று, தான் இழந்த கலைகளை பெற்றான். மாதம் ஒரு நாள் மட்டும் தன் பூரண கலைகளுடன் விளங்கும் வரம் பெற்றான். சந்திரனை எம்பெருமான் தமது முடியில் இளம் பிறையாக சூடி சந்திரசேகரராக உமையம்மையுடன் போக மூர்த்தியாக அருள் பாலித்தார். நின்ற கோல மூர்த்தி. பிரம்மோற்சவ காலங்களில் காலையில் பவனி வருபவர்.

## கல்யாண சுந்தரர்:



மலை மகளாம் பார்வதி தேவியை மணம் முடிக்கும் கோலத்தில் கையைப்பற்றியவாறு நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும் மூர்த்தம். உமையம்மையுடன் கூடியதால் போக மூர்த்

தம். திருமணஞ்சேரியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் கோலம்.

## ரிஷபாரூடர்:



எம்பெருமானதுவாகனமும், கொடியும் இடபம் எனப்படும் நந்தி. அந்த நந்தியின் மேல் உமையம்மையுடன் அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கும்போக மூர்த்தம். தர்ம தேவதையே வெள்ளை நந்தி தேவனாக எம்பெருமானையும் அம்மையையும் தாங்குவதாக ஐதீகம். திரிபுர சம்ஹாரத்தின் போது தேரின் அச்சு முறிய, திருமால் இடபமாக எம்பெருமானைத் தாங்கினார் என்பது மற்றொரு ஐதீகம்.

## உமா மஹேஸ்வரர்:



உமையம்மையுடன் கூடிய போக மூர்த்தம், அமர்ந்த நிலையில் அம்மையை தனது இடது தொடையில் அமர்த்தி இருவருமாக அருள் பாலிக்கும் மூர்த்தம்.

## அர்த்த நாரீஸ்வரர்:



இடப்பாகம் அம்மைக்கு அளித்ததால் அம்மையுடன் மாதொரு பாகனாய் எழுந்தருளி அருள் பாலிக்கும் மூர்த்தம். வலப்பக்கம் சடாமுடி, சந்திரன், மான், புலித் தோலாடை என விளங்க, இடப்புறம் அம்மைக்குரிய ஜடை ஸ்தனம். நளின இடைகால்களில் தண்டை என விளங்க நாரிபாகனாய் அருள் பாலிக்கும் போக மூர்த்தம். திருவண்ணாமலையில் ஜோதி தரிசனத்தன்று எழுந்தருளி ஆனந்தத் தாண்டவம் செய்யும் கோலம், திருச்செங்கோட்டிலே அருள் பாலிக்கும் கோலம்.

## சங்கர நாராயணர்:



அரியும் சிவனும் ஒன்று என்பதை உணர்த்தும் கோலம். வலப்பக்கத்தில் அர்த்த நாரீசுவர மூர்த்தத்தில் உள்ளது போல சிவ அம்சங்களும் இடப்பக்கத்தில் சக்கரம், பீதாம்பரம் கௌஸ்துபம், கதை என விஷ்ணு அம்சங்களும் விளங்க, இருவரும் ஒருவராய் அருள் பாலிக்கும் கோலம்.

## லிங்கோத்பவர்:



அரியும் அயனும் யார் பெரியவர் தங்களுக்குள் போட்டியிட இருவரும் தங்கள் வழக்கை தீர்க்க எம்பெருமானை நாட, அனற் பிழம்பாய் அடி முடி இல்லாமல் நின்றார். முதலில் யார் எனது அடியையோ முடியையோ காண்கின்றார்களோ அவரே பெரியவர் எனக்கூற இருவராலும் அடி முடியை காண முடியவில்லை. அனற் சோதியாய் பன்றியாய் திருமாலும், அன்னப்பறவையாய் பிரம்மனும் விளங்க சிவாலயங்களில் பின்புற கோஷ்டத்தில் இருக்கும் மூர்த்தம். சிவலிங்க வழிபாட்டிற்கு முன்னோடியான மூர்த்தம்.

## விக்னேஸ்வர அனுக்கிரக மூர்த்தி:



சோமாஸ்கந்த மூர்த்தம் போல் கந்தனுக்கு பதிலாகநடுவில் ஞான வடிவாம் கணேசன் விளங்க அருள் பாலிக்கும் போக மூர்த்தம்.

## சுகாசனர்:



உமையம்மையுடன் அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கும் போக மூர்த்தம்.

## நீல கண்டர்:



பாற்கடலை கடைந்த போதுமுதலில் வெளிவந்த ஆலகால விஷத்தை உண்டுஅகில மனைத்தையும் காத்த தியாக ராஜனாக காட்சி தரும் மூர்த்தம். விடமானதுகீழே வயிற்றில் இறங்கினால் அகிலம் முழுவதும் அழிந்து விடுமே என அம்மை பார்வதி தன் தளிரன்ன கரத்தினால் தடவ விஷமானது கழுத்திலேயே தங்கி விட்டது. எனவே ஐயனின் கழுத்து நீல நிறமானது. அவரும் நீல கண்டர் என வழங்கப்படலானார்.

## ஏக பாத மூர்த்தி:



இங்கே திரி மூர்த்திரூபமாய் அருள் பாலிக்கின்றார் எம்பெருமான். ஒரு கால் இருபுறமும் விஷ்ணுவும், பிரம்மனும் விளங்க அருள் பாலிக்கும் மூர்த்தம்.

## சண்டேசுர அனுக்கிரக மூர்த்தி:



63 நாயன்மார்களுள் ஒருவர் சண்டேசுரநாயனார். அவர் சிவபூசைசெய்யும் போது அப்பூசையை கலைக்க வந்த தனது தந்தையின் காலையையே வெட்டி தன் சிவ பக்தியை வெளிப்படுத்தியவர். எனவே எம்பெருமானும் அவருக்கு அருளி, தான் அணிந்த கொன்றை மாலையை சண்டேசுரருக்கு அணிவிக்கும் கோலம். தனது மான், மழு, இடப வாகனம் முதலியவற்றை சண்டேசுரருக்கு அளித்தார். தன் உடைமைகளைப் பாதுகாக்கும் சண்டேச பதவியைத் தந்தார் எம்பெருமான். பஞ்ச மூர்த்திகளில் ஒருவராக பிரம்மோற்சவ காலங்களில் பவனி வருபவர் சண்டேசுரர். அவருக்கு அருளிய மூர்த்தமே சண்டேசுர அனுக்கிரக மூர்த்தம்.

## கிராதர்:



ஐயன்கையில் வில் அம்புடன் வேடனாகவும், அம்மை வேடுவச்சியாகவும்நின்ற கோலத்தில்காட்சி தரும் போக மூர்த்தம். அர்ச்சுனனுக்குபாசுபதஸ்திரம்வழங்கிட எடுத்தகோலம். மாசி மகத்தன்று சில ஸ்தலங்களில் ஐயனும் அம்மையும் காட்சி தரும் கோலம். கருப்பு வர்ணமாக எம்பெருமான் விளங்கும் ஒரே மூர்த்தம்.

## கங்காளர்:



யுகபிரளயத்தின் முடிவில் அனைத்து உயிர்களும்எம்பிரானிடம் அடைக்கலம் அடைய பிரம்மன், விஷ்ணு முதலியவர்களின் எலும்புக் கூட்டை தன்தோள் மேலே தரித்து நின்ற கோலத்தில் தோளிலே திரிசூலம் தாங்கி, வீணை வாசிக்கும் கோல மூர்த்தமே கங்காள மூர்த்தம். பின் உமையம்மை சிவராத்திரி பூஜை செய்ய, மீண்டும் உயிரினங்கள் உருவாயின. இம்மூர்த்தம் பிக்ஷாடானர் போல திகம்பர மூர்த்தம்.

## சக்கரபிரதர்:



ஆயிரம் தாமரை மலர்கள் ஒன்று குறைய அதற்காக தனது கமலக் கண்ணையே பறித்து திருமால் அர்ச்சனை செய்ய அதற்கு மகிழ்ந்த எம்பெருமான் ஜலந்தரனை சம்ஹாரம் செய்ய தான் பயன்படுத்திய சக்கரத்தை திருமாலுக்கு அளிக்கும் கோலத்தில் உள்ள மூர்த்தம்.

## பிக்ஷாடணர்:



தாருகா வனத்து இருடிகள் செருக்கை அழிக்க திருமால் மோகினியாகவும், எம்பெருமான் பிக்ஷாடணராகவும் சென்று அவர்கள செருக்கழிய செய்த கோலம். சுந்தரரின் அழகில் மயங்கிய ரிஷி பத்தினிகள் அவரைப் பின் தொடர அதைப்பார்த்து ரிஷிகள் கோபம் கொண்டு அபிசார யாகம் செய்ய அதை அழித்து தர்மத்தை நிலை நாட்டிய கோலமே இம்மூர்த்தம். முதன் முதலில் எம்பெருமான் ஆனந்தத் தாண்டவம் செய்த கோலம். அடக்கிய மான் கீழே நிற்க குண்டோதரன் குடைப்பிடிக்க ஒய்யாரமாய் அழகராய் காட்சி தரும் கோலம். கங்காளர் போல திகம்பர மூர்த்தம். காரைக்காலில் ஆனி பௌர்ணமியன்று காரைக்கால் அம்மையார் மாங்கனி படைத்த மாங்கனித் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

## கால சம்ஹார மூர்த்தி:

மார்க்கண்டேயன் சிவ பூசை செய்து கொண்டிருந்த போது அவனது ஆயுள் முடிய அவனது உயிரைக் கவர வந்த எமன் பாச கயிற்றை வீச அது எம்பெருமான் மேலும் பட்டது, தன்னை வணங்கும் பக்தனின் உயிரைக் கவரவந்த யமனின் மேல் கோபம் கொண்ட சிவ பெருமான், உமையம்மையுடன் தோன்றி எமனை இடது காலால் உதைத்து சம்ஹாரம் செய்தருளினார். மார்க்கண்டேயனுக்கு என்றும் பதினாறு வயது என சிரஞ்சீவிப் பதவியும் அருளினார். இந்தக் கோலமே கால சம்ஹார மூர்த்தி, அமிர்த மிருத்யுஞ் சய மூர்த்தி. வீர மூர்த்தம், பக்தியின் மேன்மையை உணர்த்திய கோலம். தமிழ் நாட்டில் திருக்கடவூரில் அமிர்த மிருத்யுஞ்சய மூர்த்தியாய் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.



## கஜ சம்ஹார மூர்த்தி:



தாருகா வனத்து இருடிகள் அகம்பாவமாய்மத யானையின்மேல் ஊர்த்துவ தாண்டவ நடனமாடி அந்த யானையின் வயிற்றை கிழித்து சம்ஹாரம் செய்து முனிவர்களின் அகம்பாவத்தை அழித்த கோலம். யானையின் தலை மேல் ஒரு காலை ஊன்றி மறு காலை மடக்கி தாண்டவ கோலத்தில் பின் பக்கம் யானைத்தோல் விரிய நர்த்தேஸ்வரராக காட்சி தரும் கோலம். திருவழுவூர் திருத்தலத்தில் எம்பெருமான் கஜ சம்ஹார மூர்த்தியாய் எழுந்தருளி அருள் பாலிக்கின்ற வீர மூர்த்தம்.

## திரிபுராந்தகர்:



தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன் மாலிஆகிய மூன்று அசுரர்களும், தவம் செய்து சாகா வரம் பெற்று, தேவர்களையும் சிவ பெருமானையும் மதிக்காது மூன்று கோட்டைகளை உருவாக்கி வானில் வலம் வந்து பல கொடுமைகள் செய்து வந்தனர். சிவன்

தன் சிரிப்பாலேயே மூன்று கோட்டைகளையும் அழித்து திரிபுரர்களை சம்ஹாரம் செய்த கோலமே திரிபுராரி திருக்கோலம். திருவதிகை தலத்திலே எம்பெருமான் திரிபுராரியாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். இதுவும் வீர மூர்த்தம்.

## காமரி:

தக்ஷிணா மூர்த்தியாக யோகத்திலே அமர்ந்திருந்த எம்பெருமானின் யோகத்தை கலைக்க, மற்ற தேவர்களின் தூண்டுதலால்



மன்மதன் மலர் அம்பு எய்ய, ஐயன் தன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்த கோலமே இம்மூர்த்தம். பின் இரதி வேண்ட மன்மதனை உயிருடன் எழுப்பி அவளுக்கு மட்டுமே தெரியுமாறு அனங்கனாய் இருக்க அருளிய கோலம். திருக்கொறுக்கை திருத்தலத்திலே எம்பெருமான் காமரியாய் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். இதுவும் வீர மூர்த்தம்.

## ஜாலந்தாரி:

இந்திரனின் தான் என்னும் அகந்தையை அழிக்க சிவ பெருமான் தனது நெற்றிக்கண்ணை திறந்த போது அவரது வியர்வை திருப்பாற்கடலில் விழுந்தபோது ஒரு அசுர குழந்தை தோன்றியது. அந்த குழந்தை பிரம்மனை இம்சிக்க அவர் கண்ணிலிருந்து கண்ணீர் தோன்றி அதுவும் குழந்தையின் மேல் விழுந்தது. இப்படி சிவ பெருமானின் வியர்வை, திருப்பாற் கடல் நீர், பிரம்மனின் கண்ணீர்துளி ஆகிய ஜலத்தினால் உருவானவன் அசுரன் ஜலந்தராசூரன். பல கொடுமைகள் செய்த ஜலந்தராசூரன் தனது தீய எண்ணத்தால் கடைசியாக தாய் பார்வதியையே கைப்பற்ற வர, சக்கரத்தாலே அவனை சம்ஹாரம் செய்து அருளிய கோலமே இம்மூர்த்தம். திருவிற்குடியில் எம்பெருமான் ஜாலாந்தாரியாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.




## வீரபத்திரர்:

ஆணவத்தால் எம்பெருமானை எதிர்த்து யாகம் நடத்திய தக்ஷன், சதி தேவியையும் அவமானப்படுத்த அம்மை, அந்த யாக குண்டத்திலேயே குதித்து யாகத்தை அழிக்க, தக்ஷனை அழிக்க வீரபத்திரை உருவாக்கினார் எம்பெருமான். தக்ஷனின் முறையற்ற யாகத்தை அழித்து அதில் கலந்து கொண்ட தேவர்கள் அனைவருக்கும் தண்டனை வழங்கிய வீர மூர்த்தமே வீரபத்திரர்.



ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஆலயங்களின் ரகசியங்கள்

பெருமாள் கோயிலில் தீர்த்தத்தில் கலக் கப்படும் பச்சைக் கற்பூரம், வாசனை யாகவும் வித்தியாசமான சுவை யுடையதாகவும் இருக்கும். உடலில் ரத்தக் காயம் ஏற்பட்டால், நாம் உடனே காயம் செப்டிக் ஆகாமல் இருக்க தடவுகிறோமே பென்சாயின்! அது வேறொன்றுமில்லை, பச்சைக் கற்பூரக் கலவையில் உருவாவது தான். www.aanmeegamalar.com

• • •

கர்ப்பக்கிருகத்தில் நம்மேல் பாயக்கூடிய பாஸிடிவ் காந்த அலைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் பல கோயில்களில் ஆண்கள் சட்டை அணியாமல் வர வேண் டும் என்று சொல்கிறார்கள். பொதுவாகப் பெண்கள் அணியும் தங்க நகைகளில் கலந் திருக்கும் செம்பின் மூலம் அவர்களுக்கும் இதே எனர்ஜி பாய்கிறது.

• • •

கோயில் பிராகாரத்தை 11 முறை, 108 முறை என்று பிரதட்சணம் செய்யும்போது, நமது உடலின் கொழுப்பு தானாக எரிந்து ஆரோக்கியம் கூடுகிறது. அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சென்று பிரதட்சணம் செய்த தாலேயே சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் தவிர்க்கப்பட்டன.

• • •

இதோடு வேத கோஷமும்,பிரார்த்தனை சுலோகங்களும் சொல்லும்போது, உடலுடன் சேர்ந்து உள்ளமும் புத்துணர்ச்சி பெறுகிறது. மனஅழுத்தமும் ஏற்படாது. இது தான் நம் முன்னோர்கள் உடல் நலத்திற்கு கொடுத்த முக்கியத்துவங்களாகும்.


எஸ்.வெங்கடேசன்


– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்:
9811161370



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

இதுவரை வெளிவந்த

**140** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free



# தர்மத்தின் அளவுகோல் எது..?

தர்ம குணம் படைத்த மாமன்னன் போஜன். மகளின் திருமணத்திற்காக மன்னரிடம் பணம் பெற எண்ணிய ஒரு விவசாயி மன்னரை காண தலைநகர் புறப்பட்டார்.

வழியில் பசித்தால் உதவும் என்று சில ரொட்டிகளை பொட்டலம் கட்டிக் கொண்டார்.

வழி நெடுக.,

திருமணத்திற்கு வேண்டிய அளவு பணம் தர மன்னர் சம்மதிக்க வேண்டுமே என்று கடவுளை வேண்டிக் கொண்டே வந்தார்.

பசி எடுக்கவே, ஒரு குளக்கரையில் அமர்ந்து, எடுத்து வந்த ரொட்டியை சாப்பிட கையில் எடுத்தார்.

மனதிற்குள் இந்த உணவைக் கொடுத்த கடவுளுக்கு விவசாயி நன்றி சொன்னார்.

அப்போது நாய் ஒன்று அவர் எதிரில் எலும்பும் தோலுமாக வந்து நின்றது.

இரக்கப்பட்ட விவசாயி ஒரு ரொட்டியை அதனிடம் வீசினார்.

ஒரே விழுங்காக உள்ளே தள்ளிய நாய்., மீண்டும் ஆவலுடன்பார்த்தது.

இரக்கப்பட்ட விவசாயி அத்தனை ரொட்டியையும் கொடுத்து விட்டார்.

ஒரு நாள் சாப்பிடாவிட்டால் உயிரா போய் விடும்... என்று நினைத்து.

அரசர் அவர் தகுதிக்கு தானம் கொடுத்தால்., பிரஜையான நாமும், நம்மால் முடிந்ததை செய்வது தானே முறை, என தனக்கு தானே சமாதானம் சொல்லிக் கொண்டார்.

பசியை பொறுத்துக் கொண்டு தலைநகரை அடைந்தார்.

அங்கிருந்த தர்மசத்திரத்தில் சாப்பிட்டார்.

பிறகு மன்னனை சந்தித்து தான் வந்த விஷயத்தைச் சொன்னார்.


மன்னர் போஜன் விவசாயியிடம்., "என்னிடம் தர்மம் கேட்டு வந்துள்ளீர்களே, நீங்கள் ஏதாவது தர்மம் செய் திருந்தால் சொல்லுங்கள். அதை நிறுத்தும் தராசு என்னிடம் இருக்கிறது. அது எந்த அளவு எடை காட்டுகிறதோ., அந்த அளவுக்கு தங்கம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார் மன்னர்.

"தர்மம் செய்யும் அளவு பணம் என்னிடம் இருந்தால்., பணம் வேண்டி உங்களிடம் ஏன் நான் வரப் போகிறேன்..?

வழியில் பசித்திருந்த நாய்க்கு உணவளித்தேன். அதற்கு ஈடாகத்தான் உங்கள் சத்திரத்தில் நான் சாப்பிட்டு விட்டேன். எனவே நான் ஏதும் பெரிதாக தர்மம் செய்ததில்லை." என்று அடக்கமாக சொன்னார் விவசாயி.

"உங்கள் பசியை பொறுத்து கொண்டு நாய்க்கு உணவிட்டதும்





புண்ணியமே." என்று போஜன் தராசை கையில் எடுத்தார்.

ஒரு தட்டில் விவசாயி செய்த தர்மத்தையும்., மறுதட்டில் தங்கத்தையும் வைத்து நிறுத்தார் மன்னர்.

கஜனாவில் இருந்த தங்கம் முழுதும் வைத்தும் கூட தராசுத்தட்டு சமமாகவில்லை.

வியந்த மன்னன், "உங்களை பார்த்தால் சாதாரணமானவராக தெரியவில்லை. என்னைச் சோதிக்க வந்திருக்கும் தாங்கள் யார்..?" என்றார்.

"மன்னா நான் ஒரு விவசாயி. என்னைப் பற்றி சொல்லுமளவு வேறு ஏதுமில்லை." என்றார் பணிவுடன்.

அப்போது தர்ம தேவதை அங்கு தோன்றி னாள்.

"போஜனே..! தராசில் நிறுத்திப் பார்ப்பது அல்ல தர்மம். கொடுத்தவரின் மனமே அதனது அளவு கோல். இவர் மனம் மிகப் பெரியது.

பகட்டுக்காக தர்மம் செய்யாமல்., ஆத் மார்த்த மாக., வேண்டிய உயிருக்கு தன்னிடம் இருப்பதை யெல்லாம்., அதுவும் உணவை கொடுத்து விட்டார். அதனால் நீ எவ்வளவு பொன் வைத்தாலும்., தராசு முள் அப்படியேதான் இருக்கும். ஆகவே அவர் என்ன கேட்டு வந் துள்ளாரோ., அதை கேட்டு., கொடுத்தால் போது மானது." என்றாள்.

இதை ஏற்ற மன்னன் விவசாயிக்கு வேண்டிய அளவு தங்கம் கொடுத்து வழி அனுப்பினார்.

விவசாயி மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்தினார். ஆத்மார்த்த மனதுடன் தர்மத்தை/ கடமையைச் செய்தால் பலன் தானாக வரும்.


மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com




இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உதவுங்கள்...

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

**இதுவரை 140 இதழ்களை கடந்துள்ளோம்.**

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்



# 2022 ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## மேஷம்



வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளை பாதிக்கும். மேஷ ராசிக்காரர்களுக்கு, ஆகஸ்ட் மாதம் 2022 மாதம் தொழில் பார்வையில் சாதாரணமாக இருக்கும். உங்கள் பத்தாவது வீட்டின் அதிபதியான சனி இந்த மாதம் உங்கள் பத்தாவது வீட்டில் பிற்போக்கு நிலையில் இருப்பார், இதன் காரணமாக மேஷ ராசிக்காரர்கள் இந்த காலகட்டத்தில் தங்கள் வேலைக்காக கடுமையாக உழைப்பதை காணலாம். கல்வியின் பார்வையில், மேஷ ராசிக்காரர்களுக்குஆகஸ்ட் மாதம் சாதாரணமாக இருக்கும். குரு உங்கள் பன்னிரண்டாவது வீட்டில் பிற்போக்கு நிலையில் இருப்பார், இதன் காரணமாக நீங்கள் கல்வித் துறையில் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். காதல் விவகாரங்களில் ஆகஸ்ட் மாதத்தின் முதல் பதினைந்து நாட்கள் இனிமையாக இருக்கும். மாதத்தின் தொடக்கத்தில், புதன் கிரகம், புத்திசாலித்தனம் மற்றும் தகவல்தொடர்பு காரணியாகும், ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, ஆகஸ்ட் மாதம் அவர்களுக்கு கலவையான முடிவுகளை அளிக்கும் மாதமாக நிரூபிக்க முடியும்.

## ரிஷபம்



ஆகஸ்ட்மாதம் தொழில் பார்வையில் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உங்கள் ஒன்பதாவது வீடு மற்றும் பத்தாம் வீட்டின் அதிபதியான சனி உங்கள் ஒன்பதாவது வீட்டில் அதாவது அதிர்ஷ்ட வீட்டில் அமைந்திருப்பதால், இந்த காலகட்டத்தில் உங்களுக்கு அதிர்ஷ்டத்தின் முழு ஆதரவு கிடைக்கும். இந்த மாதத்தில், ரிஷப ராசி ஜாதகக்காரர்களுக்கு புதிய வணிக வழிகள் திறக்கப்படலாம். மேலும், வியாபாரத்தில் தந்தையின்ஆதரவைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. ரிஷப ராசிக்காரர்களுக்கு, ஆகஸ்ட் மாதம் கல்வியில் நல்லதாக இருக்கும். தொழில்நுட்பக் கல்வியைத் தொடரும் அல்லது வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடரும் ரிஷப ராசிக்காரர்களுக்கு அது நன்மை பயக்கும். நேரம் இருக்கலாம் சாதகமாக இருக்கும். குடும்ப வாழ்க்கையின் பார்வையில், டாரஸ் மக்களுக்கு ஆகஸ்ட் மாதம் சாதகமாக இருக்கும். திருமண வாழ்க்கையில் உங்கள் துணையுடன் சிறந்த உறவைப் பெறுவதில் வெற்றி பெறலாம்.

## மிதுனம்



மிதுனராசிக்காரர்களுக்கு, ஆகஸ்ட் மாதம் தொழில் ரீதியாக நேர்மறையான முடிவுகளை அளிக்கும். உங்கள் பத்தாவது வீட்டின் அதிபதியான குரு வக்ர நிலையில் இருப்பார் மற்றும் இந்த காலகட்டத்தில் அதன் சொந்த ராசியில் இருப்பார், இதன் காரணமாக இந்த காலகட்டத்தில் உங்கள் கடின உழைப்பின் முழு முடிவுகளை நீங்கள் பெறலாம், இதன் காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம் உங்கள் வாழ்க்கையில் நேர்மறையான முடிவுகளைப் பெறுங்கள். வியாபாரத்தில் சாதகமான முடிவுகள் கிடைக்கும். இதனுடன், இந்த நேரத்தில் நீங்கள் எந்த புதிய வேலைக்கும் திட்டமிடலாம். உங்கள் இரண்டாவது வீட்டில் சூரியன் மற்றும் சுக்கிரன் அமர்ந்திருப்பதால், இந்தக் காலத் தில் உங்கள் வருமானமும் அதிகரிக்கும். திருமண மானவர்களுக்கு சாதகமாக இருக்கும், இந்த நேரத்தில் உங்கள் இருவருக்கும் இடையே அன்பும் நெருக்கமும் அதிகரிக்கும். பொருளாதாரக் கண் ணோட்டத்தில், மிதுன ராசிக்காரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் சாதகமாக இருக்கும்.

## கடகம்

மாதத்தின் தொடக்கத்தில், உங்கள் பத்தாவது வீட்டில் அதாவது கர்ம வீட்டில் செவ்வாய் மற்றும் ராகு இணைவதால், அங்காரக யோகம் போன்ற ஒரு சூழ்நிலை உருவாக் கப்படுகிறது, இது உங் கள் வாழ்க்கையில் பிரச்சனை களின் காரணியாக மாறும். சூரியன் மற்றும் புதனின் இந்த இணைவு வேலையில்லாத மற்றும் புதிய வேலை தேடும் கடக ராசிக்காரர்களுக்கு நன்மை பயக்கும். இந்த நேரத்தில், புலத்தில் தெரியாத சிலரின் ஆதரவை நீங்கள் பெறலாம், குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை, ஆகஸ்ட் மாதம் கடக ராசி ஜாதகக்காரர்களுக்கு சாதாரண மாக இருக்கும். இந்த மாதம், சூரியன், உங்கள் இரண்டாவது வீட்டின் அதிபதி, அதாவது குடும்ப வீடு, உங்கள் இரண்டாவது வீட்டில் இடம் பெயரும், இதன் காரணமாக உங்கள் குடும்ப உறுப்பினர்களிடையே அன்பும் நல்லிணக்கமும் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த மாதம், குரு, உங்கள் ஆறாவது வீட்டின் அதிபதி அதாவது நோயின் வீடு, உங்கள் 9வது வீட்டில், அதிர்ஷ்ட வீட்டில் இருக்கப் போகிறார்.



## சிம்மம்

இந்த மாத தொடக்கத்தில் உங்கள் பத்தாவது வீட்டின்அதிபதியான சுக்கிரன் கடகத்தின் பன்னிரெண்டாம் வீட்டில் அமைந்திருப்பதால், இந்தத் துறையில் உங்க ளுக்கு சாதகமான முடிவுகள் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த நேரத்தில் உங்கள் நிறுத்தப்பட்ட வேலையை தானாகவே மீண்டும் தொடங்கலாம், அது உங்களுக்கு பயனளிக்கும். இது தவிர, வெளிநாடுகளில் வியாபாரம் செய்ப வர்கள் அல்லது வெளிநாடு தொடர்பான வியா பாரம் செய்பவர்களும் இந்த காலத்தில் சாதகமான முடிவுகளைப் பெற வாய்ப்புள்ளது. குடும்ப வாழ்க்கையின் கண்ணோட்டத்தில் பார்த்தால், இந்த மாதம் உங்களுக்கு நன்றாக இருக்கும். வீட்டின் பெரியவர்களின் ஆதரவைப் பெற முடியும். காதல் விஷயத்தில், சிம்ம ராசி மக்களுக்கு ஆடி மாதம் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக் கும். வெளிநாட்டு வர்த்தகத்தில் இருந்து நிதி நன்மைகளைப் பெறுவதில் வெற்றிகரமாக முடியும். உடல்நலக் கண்ணோட்டத்தில், சிம்ம ராசிக் காரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் முதல் பாதியில் பிரச்சினைகள் நிறைந்ததாக இருக்கும்.



## கன்னி

தொழில் பார்வையில், ஆகஸ்ட் மாதம் நன்றாக இருக்கும். இந்த மாதம், உங்கள் பத்தாவது வீட்டின் அதிபதி, அதாவது கர்மாவின் அதிபதி புதன் உங்கள் நண்பரின் ராசிக்குச் சென்று உங்கள் பன்னிரண்டாவது வீட்டில் அமர்ந்திருப்பார். கல்வித் துறையில் சிறப்பாக செயல்படுவதைக் காணலாம். குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை கன்னி ராசிக்காரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் சரா சரியாக இருக்கும். இதன் போது, கேது உங்கள் இரண்டாவது வீட்டில் அதாவது குடும்ப வீட்டில் அமையும், இதன் காரணமாக குடும்பத்தில் ஒருவித பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளது. காதல் மற்றும் திருமண வாழ்க்கையைப் பொறுத்தவரை, ஆகஸ்ட் மாதம் கன்னி ராசி ஜாதகக்காரர்களுக்கு கலவையான முடிவுகளை கொடுக்கும் மாதமாக நிரூபிக்க முடியும். நிதி ரீதியாக நல்லதாக இருக்கும். உங்கள் வருமானம் அதிகரிக்கும். கன்னி ராசிக்காரர்களின் ஆரோக்கியம் ஆகஸ்ட் மாதத்தில் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக் கலாம். இந்த காலகட்டத்தில் உங்கள் நாள்பட்ட



நோய்கள் உங்களை தொந்தரவு செய்யலாம். இதனுடன், புதிய நோய்களும் உங்கள் துன்பத்தை அதிகரிக்கும்.

## துலாம்




ஏற்ற இறக்கங்கள் நிறைந்ததாக இருக்கும், உங்கள் இயல்பில் தூண்டுதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தொழில் பார்வையில், துலாம் ராசிக் காரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் கலவையான முடிவுகளை அளிக்கும். துலாம் ராசியின் பத்தாவது வீட்டில்,அதாவது கர்ம வீட்டில் சூரியன் மற்றும் சுக்கிரன் இணைந் திருக்கும் மற்றும் அது சனியின் முழுப்பார்வை யையும் கொண்டிருக்கும், இதன் காரணமாக துலாம் ராசி ஜாதகக்காரர் களத்தில் சிரமங் களை எதிர்கொள்ள நேரிடும். கல்வியில் சாதகமான தாக இருக்கும். கல்வித் துறையில் பல நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பவாழ்கை பொறுத் தவரை துலாம் ராசி ஜாதகக் காரர் ஆகஸ்ட் மாதத்தில் கலவையான பலன் பெற வைப்புள்ளது. பொருளாதார கண்ணோட்டத்தில் ஆகஸ்ட் மாதம் பலனளிக்கும்.உடல்நலம் தொடர்பான பிரச்சனை கள் இந்த மாதம் உங்களை தொந்தரவு செய்யும்.

## விருச்சிகம்



ஒவ்வொரு துறையிலும் நேர்மறையான முடிவு களை அளிக்கும் மாதமாக இருக்கும். தொழில் ரீதியாக, ஆகஸ்ட் மாதம் உங்களுக்கு மிகவும் நன்றாக இருக்கும். வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. படிப்பில் ஆர்வம் ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அமைதியும் கிடைக் கும். காதலர்களுக்கு இந்த மாதம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். குரு, உங்கள் ஐந்தாவது வீட்டின்அதிபதி, அதாவது காதல் வீடு, உங்கள் ஐந்தாவது வீட்டில் அமைந்துள்ளது, இதன் காரண மாக காதலர்களுக்கிடையிலான உறவில் இனிமை ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்த மாதம், உங்கள் இரண்டாவது வீட்டின் செல்வத்தின் அதிபதியான வியாழன் உங்கள் ஐந்தாவது வீட்டிலும் உங்கள் சொந்த ராசியிலும் இருப்பார், இதன் காரணமாக இந்த மாதம் உங்களுக்கு நிதி நன்மைகள் கிடைக்கும். ஆகஸ்ட் 2022 விருச்சிக ராசிக்காரர்களுக்கு ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று தொந்தரவாக இருக்கும். இந்த நேரத்தில் உங்கள் ஆறாவது வீட்டின் அதிபதியான செவ்வாய், அதன் ராசியில் ராகுவுடன் இணைவார், இது தவிர, கேது உங்கள் ஆறாவது வீட்டிலும் முழு பார்வை பெறுவார். கிரகங்களின் இந்த நிலை காரணமாக, விருச்சிக ராசி ஜாதகக் காரர் இந்த மாதத்தில் மன உளைச்சலுக்கு ஆளா கலாம்.

## தனுசு



தொழில் சாதகமாக இருக்கும். இந்த மாதம் நீங்கள் தொழில் துறையில் அதிர்ஷ்டத்தைப் பெற முடியும். கல்வியின் பார்வையில், இந்த மாதம் தனுசு ராசிக் காரர்களுக்கு சற்று கடின மாக இருக்கும். இந்தமாதம், உங்கள் ஐந்தாவது வீட்டில் அதாவது கல்வி வீட்டில் ராகு இடம் பெற்றிருப்பதால், நீங்கள் சில பிரச்சனை களை சந்திக்க வேண்டியிருக்கும். தனுசு ராசிக் காரர்களுக்கு, ஆகஸ்ட் மாதம் குடும்ப வாழ்க்கை யின் அடிப்படையில் ஒரு கலவையான மாதமாக இருக்கும். இந்த மாதம், உங்கள் இரண்டாவது வீட்டில், அதாவது குடும்ப வீட்டில், சனிபகவான் வக்ர நிலையில் அமர்ந்திருப்பார் மற்றும்சந்திரன் இணைவதன் மூலம், குடும்பத்தில் சர்ச்சை ஏற்பட வாய்ப்பு உள்ளது. தனுசு ராசி ஜாதகக்காரர் காதல்மற்றும் திருமண வாழ்க்கை ஆகஸ்ட் 2022 மாதத்தில் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். நிதி நிலையில் சவால்களை எதிர் கொள்ளலாம். புதிய நோய்கள் உங்களை தொந்தரவு செய்யலாம். இரத்தம் தொடர்பான பிரச்சனைகளால் இந்த மாதமும் நீங்கள் சிரமப் படலாம்.

## மகரம்

தொழில் கண்ணோட்டத்தில் பார்த்தால்,தொழி லில் சில பிரச்சனைகளை சந்திக்க வேண்டி யிருக்கும். கல்வியின் பார்வையில், மகரராசி ஜாதகரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் நல்லதாக இருக்கும். கல்வித் துறையில் நல்ல முடிவு களைப் பெற முடியும். சகோதரர்களின்முழு ஆதரவையும் ஆதரவையும் பெறலாம். குழந்தை பெற விரும்புபவர்கள் அல்லதுஅதற்காக திட்டமிடு பவர்கள், இந்த மாதம் அவர்களின் விருப்பத் தை நிறைவேற்றலாம். திரு மண வாழ்க்கையில் சில பிரச்சனைகள் இருக்கலாம். நிதி வாழ்க்கையைப் பொறுத்த வரை, ஆகஸ்ட் மாதம் மகர ராசி ஜாதகக்காரர்களுக்கு சாதகமாக இருக்கும். ஆரோக்கியத்தின் பார்வையில், ஆகஸ்ட் மாதம்



மகரராசிக்காரர்களுக்கு நன்றாக இருக்கும். இந்த மாதம், உங்கள் ஆறாவது வீட்டின் அதிபதியான புதன், அதாவது வியாதி வீடு, உங்கள் எட்டாவது வீட்டில், அதாவது வயது மற்றும் சிம்மத்தில் இருக்கப் போகிறது, இதன் காரணமாக மகர ராசிக்காரர்களின் எதிரிகள் தோற்கடிக்க முடியும்.

## கும்பம்

கும்ப ராசி ஜாதகக்காரர் நேர்மறையாக இருக்க வாய்ப்புள்ளது. இந்த மாதம், உங்கள் பத்தாவது வீட்டின் அதிபதி செவ்வாய், அதாவது கர்மாவின் அதிபதி, உங்கள் மூன்றாவது வீட்டில், அதாவது வலிமையான வீட்டில் ராகுவுடன் தங்குவதன் மூலம் அங்காரக யோகம் அமையும், இதன் காரணமாக நீங்கள் பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும். கல்வியின் பார்வையில், கும்ப ராசிக்காரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் சாதகமாக இருக்கும். குடும்ப வாழ்க்கை ஆகஸ்ட் மாதத்தில் நன்றாக இருக்கும். இந்த மாதம், உங்கள் இரண்டாவது வீட்டின் அதாவது குடும்ப வீட்டின் அதிபதியான குரு அதன் சொந்த ராசியில் அமைந்திருக்கும், இதன் காரணமாக குடும்பத்தில் நடக்கும் சச்சரவு தீர்க்கப்படும். காதல் மற்றும் திருமண வாழ்க்கையின் அடிப்படையில் கும்ப ராசிக்காரர்களுக்கு ஆகஸ்ட் மாதம் இனிமையானதாக இருக்கும். இந்த மாதம், உங்கள் ஆறாவது வீட்டில் அதாவது நோயின் வீட்டில் சுக்கிரன் மற்றும் சூரியன் இணைந்து, உங்கள் எதிரிகள் தங்கள் திட்டங்களில் தோல்வியடையக்கூடும்.



## மீனம்

இந்த மாத தொடக்கத்தில், உங்கள்பத்தாவது வீட்டின் அதாவது கர்ம வீட்டின் அதிபதியான குரு உங்கள் முதல் உயர்வு வீட்டில் அமைந்திருக் கும், இது உங்கள் தொழிலை வலுப்படுத்தும். இது தவிர, மீன ராசிக்காரர்கள் ஒரு புதிய தொழிலைத் தொடங்க திட்டமிட்டால், இந்த காலம் அவர்களுக்கு சாதகமாக இருக்கும். கல்வியின் பார்வையில், ஆகஸ்ட் மாதம் மீன ராசிக்காரர்களுக்கு கலவையான முடிவுகளைத் தரலாம். கல்வித் துறையில் பிரச்சினைகள் ஏற்படலாம். மீன ராசியினரின் குடும்ப வாழ்க்கை ஆகஸ்ட் மாதத்தில் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கலாம். இந்த மாதம், செவ்வாய் மற்றும் ராகு உங்கள் இரண்டாவது வீட்டில் அதாவது குடும்ப வீட்டில் இணைவார்கள், இதன் காரணமாக அங்காரக யோகம் உருவாகும். உங்கள் காதல் வாழ்க்கை இனிமையாக இருக்கும். மீன ராசிக்காரர்களுக்கு, பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஆகஸ்ட் மாதம் ஒரு கலப்பு மாதமாக இருக்கும். உங்கள் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த காலத்தில் உடல்நலப் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.



# சிவலிங்க நாமங்கள்

**வியக்த லிங்கம்**

- அவயவங்களுடன் கூடிய விக்ரகங்கள்

**அவ்யக்த லிங்கம்**

- அவயவமில்லாது பீடமும் லிங்கமும் மட்டுமுள்ளது

**வியக்தா வியக்த லிங்கம்**

- முகமும் தோளும் உள்ள விக்ரகம்.

**பிரார்த்த லிங்கம்**

- உலகிலுள்ள உயிர்களுக்குஅருள்புரியும் பொருட்டு தேவர்களாலும், மஹரிஷிகளாலும், மானுடர்களாலும், கிராமங்களிலும், நகரங்களிலும், விதிப்படி ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம்.

### பிரார்த்த லிங்கங்களின் வகைகள்

| | |
|---|---|
| சுயம்பு லிங்கம் | தானாக உண்டானதும், கரடு முரடாக உள்ளதாயும், ரேகையற்றதாயும் உள்ளது. |
| தேவிக லிங்கம் | அம்பிகையினால் வழிபடப்பட்டது. |
| திவ்ய லிங்கம் | தேவர்களால் வழிபடப்பட்டது. |
| மானுட லிங்கம் | வியாக்ரபாதர் போன்ற மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. |
| ஆர்ஷ லிங்கம் | மஹரிஷிகளால் பூசிக்கப்பட்டது. |
| பாண லிங்கம்: | கங்கை, யமுனை, நர்மதை, சிந்து நதிகளின் மத்தியிலும், நேபாளம், கேதாரம் முதலிய இடங்களிலும் கிடைப்பதாகிய பாணாசூரனால் பூசிக்கப்பெற்ற லிங்கங்கள். |
| இராட்சச லிங்கம் | அசுரர்களால் பூசிக்கப்பெற்றவை. |

நேதாஜியை பார்த்து பயந்த வெள்ளையர்கள்

# வேயிறு தோளிபங்கன் திருமுறை பாடல் தொடங்கி

# ‘அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே’

## திருமுறை பாடல் முடிய



# வழங்கப்பட்ட சுதந்திரச் செங்கோல்

இந்திய சுதந்திரத்திற்காக பல்வேறு தரப்பினர் பல்வேறு வகையில் போராடி வந்தனர். இதில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், மிகவும் தீவிரமாக தனது போராட்டத்தை களத்தில் அரங்கேற்றினார்.


ஹிட்லரின் நாஜிப்படை போன்று, பல்வேறு படைகளன்களை திரட்டி, இந்தியாவை அடிமைப்படுத்தி, இந்தியாவை கொள்ளையடித்துக் கொண்டிருந்த வெள்ளைக் காரர்களை ஓட ஓட விரட்டியடிக்கும் நோக்கில், மிகப் பெரிய ஆயுதப் படையை இந்தியாவை நோக்கி திரட்டிக்கொண்டு வந்தார்.

இந்த தகவலை அறிந்த வெள்ளைக்காரர்கள் மிகுந்த பேரதிர்ச்சி அடைந்தனர். ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருந்த உலகப் போரில் வெள்ளைக்காரர்களுக்கு போதிய படை பலம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இந்தியர் நேதாஜி படையுடன் வந்து நம்மை தாக்கி விரட்டிவிட்டால் உலக அளவில் அவமானமாகிவிடும் என்று எண்ணினர் வெள்ளைக்கார கொள்ளை யர்கள், உடனே அவர்களின் மேலிடத்திலிருந்து ஒரு தகவல் வந்தது.

நேதாஜியுடன் போரிட்டு நாம் தோற்றால் அவமானமாகிவிடும், அதனால் நாமாக இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு நட்புடன் விலகிக் கொள்வது போன்று பாவனை செய்துவிட்டு இந்தியாவிலிருந்து தப்பித்து வந்து விடுங்கள் என்ற உத்தரவு மௌண்ட் பேட்டனுக்கு கிடைத்ததும்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!




மௌண்ட் பேட்டன், நேருவை அழைத்து, உங்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கப் போகிறோம் அதை எப்படிக் கொடுப்பது என்று கேட்க,

நேருவுக்கு குழப்பமாக இருந்தது.

எதை அடையாளமாக வைத்து சுதந்திரத்தைப் பெறுவது.....

(பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியது என்பதற்கு எந்த சாசனமும் இல்லை).

உடனே நேரு மூதறிஞர் ராஜாஜியை அணுகி, "எனக்கு இந்த நடைமுறைகள் தெரியாது, அதனால் தாங்கள் தான் தீர்வு கூற வேண்டும்" என்று கூற,

உடனே ராஜாஜி **"கவலை வேண்டாம், எங்கள் தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது, ராஜ குருவாக இருப்பவர், செங்கோலைப் புதிய மன்னருக்குக் கொடுத்து, ஆட்சி மாற்றம் செய்வர். நாமும் அன்னியன் கையால் சுதந்திரம் பெறுவதை விட, குரு மகானின் கையால் செங்கோலைப் பெற்று ஆட்சி மாற்றம் அடையலாம்",** என்றார்.

நேருவும் "நேரம் குறைவாக உள்ளது. உடனே ஏற்பாட்டை செய்யுங்கள்", என்று உத்தரவிட்டார்.

ராஜாஜி உடனே திருவாவடுதுறை ஆதீனத் தைத் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்ல,

அப்போது கடும் காய்ச்சலில் இருந்த ஆதீனம் அவர்கள், உடனே முறையாக செங்கோல் தயாரித்து, தங்க முலாம் பூசி, இளைய ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து, கூடவே ஓதுவார் மூர்த்திகளையும் உடன் அனுப்பி வைத்தார். (தேவாரத்தில் இருந்து கோளறு பதிகம் பதினோரு பாடல்களை குறித்துக் கொடுத்தார் இந்த பாடல்களை அப்போது ஓதுவார் மூர்த்திகள் பாட வேண்டும்).

ராஜாஜி அனுப்பிய தனி விமானத்தில் அவர்கள் செங்கோலுடன் டில்லி போய் சேர்ந்தனர்.

பல நூறு ஆண்டுகள் அடிமைத் தளையில் இருந்து, பாரதத்தின் விடுதலை பெறும் விழாவிற்காக எல்லோரும் காத்திருந்தனர்.

அந்த சுதந்திர வைபவ தினத்தில் மௌண்ட் பேட்டனிடம் இருந்து செங்கோலை குரு மகா சன்னிதானம் திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகள் பெற்று, செங்கோலுக்கு புனித நீர் தெளித்து, ஓதுவார் மூர்த்திகள், **வேயிறு தோளிபங்கன்** என்று துவங்குகிற தேவார திருப்பதிகத்தைப் பாட, பதினோராவது பாடலின் கடைசி வரி,

**"அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே"**

இந்த வரியைப் பாடி முடிக்கும் போது தான், சுவாமிகள் செங்கோலை நேருவிடத்தில் கொடுத்தார். அந்த நிகழ்வைத்தான் நாம் சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறோம்.

இந்த நிகழ்வு தமிழுக்கும் தமிழகத்திற்கும் எவ்வளவு பெருமை..

திருவாவடுதுறை ஆதீன மடத்தில், இந்த செங்கோல் வைபவம், கருப்பு வெள்ளை புகைப்படமாக உள்ளது. புகைப்படத்தில் 15.8.1947 என்று தேதியிட்டு இருப்பதையும், நேரு, கையில் செங்கோலுடன் இருப்பதையும், தம்பிரான் பண்டார ஸ்வாமிகள் அருகில் உள்ளதையும் படத்தில் காணுங்கள்...

# இயற்கை பல்பொடி

அகத்தின் அழகு முகத்தில் தெரியும், முகத்தின் அழகு பற்களில் உள்ள தூய்மையில் அறியலாம், இந்த வகையில் பற்களை பேணிக்காப்பது மிகவும் அவசியம்.

இந்த பற்களை பாதுகாக்க இயற்கையான பற்பொடியை தயாரித்து பயன்படுத்தலாம். அவ்வாறு ஒரு இயற்கையான பற்பொடியை தயாரிக்கும் முறையைப் பற்றி பார்ப்போம்.



தே.பொருட்கள்:

| | |
|---|---|
| சீமைகாசிக்கட்டி, | சுக்கு, |
| மிளகு, | கடுக்காய், |
| நெல்லிக்காய், | தான்றிக்காய், |
| கிராம்பு, | வாய் விளங்கம், |
| தாளிச பத்திரி, | மாசிக்காய், |
| கருவேலம் பட்டை, | ஆலம்பட்டை, |
| வேப்பம் பட்டை | |

ஆகிய அனைத்தையும் 100 கிராம் அளவு எடுத்துக் கொண்டு ஒன்றாகக் கலந்து தூள் செய்து கொள்ளவும். இதை பல் பொடியாக உபயோகித்து வர பல்வலி, பல்கூச்சம், ஈறுகளில் உண்டாகும் ரத்தப் போக்கு, பல் அசைவு போன்ற குறைபாடுகள் நீக்கி பற்கள் முத்துபோல் ஜொலிக்கும் கருங்காலி மரத்திலிருந்து உருவாகும் ஒரு வகைபிசின், சீகைகாசிக்கட்டி என்று அழைக்கப்படுகிறது.

இதனைத் தனியாகவோ அல்லது இதனுடன் சில மருந்துப் பொருட்களைத் தயார் செய்யலாம். இதை மருந்து பல்பொடியாக உபயோகித்து வர அதி அற்புதப் பலனை உடனே பெறலாம்.

# 140 இதழ்களை கடந்துள்ளோம்

## ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம்

2.ஆன்மிகமலர் Mobile app

3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம் ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு, ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம், அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,

போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில் வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:

சி.வி.நடராஜன் 9444228203

# குற்றங்களை களைந்து குணத்தை மட்டும் பார்க்கும் நாராயணன்

பாசத்திலேயே மிகச்சிறந்தது தாய்ப்பாசமாகும். அதற்கு இணையாக வேறு எதையும்கூற முடியாது. மனைவி சொல்வாள் என் கணவனின் மேல் நான் அளவு கடந்த பிரியம் வைத்திருக்கிறேன். அவனில்லாமல் என்னால் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது. அவருக்காக உயிரையே கொடுப்பேன் என்று காதல் மொழி பேசுவாள்.

அதே கணவனே குடித்துவிட்டுஅவளை உதைத்தால் சம்பாதித்ததை அவளிடம் கொடுக்காமல் மறைத்தால் அவளைவிட்டு விட்டு வேறொரு பெண் துணையை தேடினால் இந்த படுபாவி செத்து ஒழிய மாட்டானா? இவன்செத்தால் தான் எனக்கு நிம்மதி கடவுள் எப்போதுதான் இவனது கை கால்களை ஒடித்து மூலையில் போடுவானோ என்று புலம்புவார்கள்.

மனைவி மட்டுமல்ல கணவன் காட்டும் பாசமும் இப்படி நீரின் மேல் போட்ட கோலம்தான். என்னைப் பெற்றவர்களை காலமெல்லாம்கண்களுக் குள்வைத்து பாதுகாப்பேன் அவர்களுக்காக எதையும் தியாகம் செய்வேன் என்று பாசமொழி பேசும் பிள்ளைகள் பலர் தனக்கென்று மனைவிவந்தவுடன் பிள்ளை குட்டிகள் பிறந்தவுடன் வயதான பெற்றோர்களை சுமையாக கருதி தூக்கியெறிந்து விடுவதை அன்றாடம் பார்க்கிறோம்.

ஆனால் தாய் அப்படிப்பட்டவள் அல்ல குருடாக குழந்தை பிறந்தாலும் அது எதற்குமே



கடவுள் உருவாக்கிய மதம்

உதவாது என்று தெரிந்தாலும் கைவிட்டு விட மாட்டாள் மனைவியினை சேலையைப் பிடித்துக்கொண்டு தனிக்குடித்தனம் மகன் போனாலும் ஐயோ என் பிள்ளைக்கு ஒரு பிடிசாதம் கூட கொடுக்க முடியாத பாவியாகி விட்டேனேஎன்று தன்னைத் தானே நொந்து கொள்வாள் கொலைகாரணாக காம வெறிபிடித்த மிருகமாக பிள்ளை அலைந்தாலும் ஊரெல்லாம் அவனை வெறுத்து ஒதுக்கினாலும் ஏன் அந்த முரட்டுப்பிள்ளை தன்னையே கொலை செய்ய வந்தாலும் வலிய பிடித்து இழுத்துப்போட்டு மார்பில் சாய்த்து தாலாட்ட விரும்புவாளே தவிர வேண்டாம் இவன் என்று வீசி விட மாட்டாள். நாராயணறும் இப்படித்தான்.




ஒழுக்கம் கெட்டு ஊதாரியாய் அலைந்தாலும் தர்மத்தை அழிக்கும் தருதலையாக திகழ்ந்தாலும் நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினாலும் மனிதனின் குற்றங்களை களைந்து குணத்தை மட்டுமே பார்ப்பான். சூரியனின் வெளிச்சம் எப்படி எல்லா பொருளையும் சமமாக தீண்டுமோ அதைப்போலவே திருமாலின் திருவருள் எல்லா உயிரையும் சமமாக பார்க்கும் நாராயணனின் சன்னதி முன்பு பொருளை கொள்ளை அடித்தவனும் கடவுளின் அருளை கொள்ளை அடித்தவனும் ஒன்றேதான். கடவுளே வேண்டாம் அவன் கருணையே தேவையில்லை என்று மதம் கொண்டு மனிதர் கூட்டம் திரிந்தாலும் அத்தனை பேரையும் கருணை விழியால் பார்த்து அன்பு கரத்தால் அணைத்து தனது திருவடி நிழலில் இளைப்பாற அழைப்பதுதான் திருமாலின் நித்திய கல்யாண குணம் இந்த குணத்திற்கு ஒரு வைஷ்ணவம் சுவாமித்துவம் என்ற பெயரைத் தருகிறது.

நேற்று வரை சைக்கிள் கடை மரபெஞ்சில் தோள் மீது கை போட்டுக் ஊர்க்கதையெல்லாம் பேசித் திரிந்த நண்பன் இன்று தனக்கு மேலாளர் பதவி வந்துவிட்டதனால் தனது நண் பர்களை பார்த்து புன்னகை செய்வதற்கு கூட கூச்சப்படுவான்.

படித்து பட்டம் பெற்ற உயர்ந்த பதவியில் அமர்ந்துவிட்டால் மனிதனுக்கு ஏற்படும் ஆணவத்திற்கு அளவேயில்லாமல் போய்விடும். அழுக்கு வேட்டியோடு பெற்ற தகப்பனே எதிரில் வந்தாலும் இவன்தான் என்னை பெற்றவன் என்று அறிமுகப்படுத்த தயக்கம்க் காட்டுவான். பத்து வேலி நிலத்திற்கு சொந்தக்காரன் நான் ஊராரின் பிரச்சனையை பஞ்சாயத்து செய்து தீர்த்து வைக்கும் நாட்டாண்மைக்காரன் நான். நான் போய் என் தகுதியை தாழ்த்தி கீழ் ஜாதிக்காரனிடம் பேசுவதா? அவர்க ளோடு சரி நிகர் சமானமாக பழகுவதா? முடியவே முடியாது என்று ஆணவத்தில் கொக் கரிக்கும் எத்தனையோ மூடர்களை தினசரி பார்க்கிறோம்.

இந்த மனித சரிரம் அழியக்கூடியது ஓடுகின்ற மூச்சு நவதுவாரங்களின் எதாவது ஒன்று வழியாக வெளியேறிவிட்டால் ஆடிப்பாடி ஆட்டம்



போட்ட உடல் சடலமாகசாய்ந்து விடும் மாடி மனை கட்டியிருந்தாலும் கோடி பணம் சொத்து இருந்தாலும் ஆள் அம்பு அதிகாரப் பதவி இருந் தாலும் யமன் வந்து கூப்பிடும் போது கொஞ்சம் நேரம் பொறு இந்த வேலையை முடித்துவிட்டு வருகிறேன் என்று அவகாசம் கேட்க முடியாது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

போட்டதை போட்டபடி வாயை மூடிக்கொண்டு கிளம்பி விட வேண்டியது தான் இப்படிப்பட்ட அற்பமான மனித வாழ்வை நிரந்தரமானது என்று நம்பி ஆணவத்தால் எத்தனை அக்கிர மங்கள் செய்கிறோம் பணத்தாலும், மதத்தாலும், ஜாதியாலும் எத்தனை மனிதர்களை அடிமைப் படுத்தி ஆனந்தப்படுகிறோம்.

நம்மைபோல் இறைவன் அழியக்கூடியவனா? அவன் இந்த பிரபஞ்சம் அனைத்துமேதோன்று வதற்கு முன்னாலும் இருந்தான். இவையாவும் அழிந்தபிறகும் இருப்பான். இன்று நாம் பெருமை மிக்கதாக எதையெல்லாம் கருதுகிறோமோ உயர்ந்தது உன்னதமானது ஈடு, இணையற்றது என்று எதையெல்லாம் போற்றி புகழ்கிறோமோ சுற்றி நின்று பாதுக்காக்கிறோமோ அவையெல்லாமே நாராயணனால் படைக்கப்பட்டதுதான் ஒரு சிறிய கல்லை செதுக்கி சிலையாக வடிப்பதற்கு ஒரு மனிதனுக்கு எவ்வளவு காலம் தேவைப்படு கிறது எவ்வளவு உழைப்பு, அறிவு அதற்காக செலவிடப்படுகிறது? ஆனால் ஒரு நொடியில் கால்பங்கு நேரத்தில் பல கோடி உயிர்களை பல கோடி உடல்களை உருவாக்கும் பரந்தாமனி டம் எத்தகைய ஆற்றல்கள் குடிக் கொண்டிருக்க வேண்டும். அவன் எவ்வளவு உயரத்தில் இருப்பவனாக இருக்க வேண்டும் ஆனால் அத்தனையும் மறந்து அனைத்து சக்திகளையும் அனைத்துகௌரவங் களையும் ஒதுக்கி வைத்து விட்டு தன் தகுதிக்கு முன் னால் தூசிக்கான தகுதி கூட இல்லாத மனிதனுக்காக இறங்கி வருவான்.

தன் மீது அன்பு செலுத்தியவன் ஏழையா, பணக்காரனா, தன் மீது பாசம் வைத்தவன் கோழையா? மாவீரன? தன்னை நேசிப்பவன் அறிஞனா? அரசனா? என்று வேற்றுமை பாராட் டாமல் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவேன் என்று கீதையிலே சொல் கிறானே பார்த்த சாரதி அவனுடைய இந்த இயல்பை சௌசால்யம் என்ற பெயரில் ஸ்ரீ வைஷ்ணவம் அழைக் கிறது.

ஒரு வகுப்பாசிரியனை நினைத்த நேரத்தில் சென்று ஒரு மாணவனால் கண்டுவிட முடியாது. அதற்கு என்ற சில நடைமுறைகள் இருக்கிறது. ஆசிரியர்களின் கதையே இப்படி யென்றால் சட்டமன்றநாடாளு மன்ற உறுப்பினர்களை அவ்வளவு சீக்கிரம் ஒரு சாமானியனால் பார்த்துவிட முடியுமா? சந்திக்க அவர்கள் நேரம் ஒதுக்கி தருவதே பெரிய விஷயம் ஆனால் கடவுள் அப்படியல்ல அவனை யார் வேண்டுமென்றாலும் எப்போது வேண்டுமென்றாலும் உள்ளன்போடு நினைத் தால் தரிசனம் செய்யலாம். இன்று எனக்கு வேலையாயிருக்கிறது நாளைக்கு பார்க்கலாம் என்று அவன் தரிசனத்தை தள்ளிப்போட மாட் டான். இந்த உயரிய குணத்தை சௌலப்பியம் என்ற பெயரால் வைஷ்ணவம் அழைக்கிறது.

அறிவு, ஞானம் என்று சொல்கிறோமே அப்படி யென்றால் என்ன? ஒரு பிரச்சனையை எப்படி தீர்ப்பது எப்படி உருவாக்குவது என்று ஷன நேரத்தில் முடிவு செய்யும் ஆற்றல்தான் அறிவு. இப்படி நடந்தால் எப்படி முடியும் என்று முன் கூட்டியே தீர்மானத்திற்கு வருவதுதான் ஞானம். இப்படி கீழ் நிலையில் கிடக்கின்ற ஜீவங்கள் அனைவரையும் உயர்த்துவதான நாராயணனின் இயல்பை ஸ்ரீ வைஷ்ணவம் ஞானம் என்று அழைக்கிறது.

உயிர்களுடைய குற்றங் குறைகளை களைந்து பிறப்பால் பெரு



நிலையை ஜீவங்களுக்கு தருவதும் நிரந்தர வைகுண்டவாசிகளாக அடிய வர்களை வைத்து அருள் பாலிப்பதும் பாவ அழுக்குகள் மூடிய கடையனை கூட தன்அருள் ஜுவாலையால் சுத்தனாக மாற்றக் கூடிய இயல்பு கொண்ட திருமாலின் ஆற்றல் மிகு கருணைக்கு சக்தி என்ற பெயரை கொடுத்து சிறப்பிக் கிறது, ஸ்ரீ வைஷ்ணவம்.

தன்னலமே இல்லாத ஒரு மாபெரும் தலைவரை பற்றி கேள்வி படுகிறோம். அவரது கொள்கைகள் வாழ்ந்த முறை அவரின் சேவைகள் அனைத்துமே நமது மனதை கவர் கின்றன. உடனே நம்மையறியாமல் இத்தகைய மாமனிதனிடம் நமக்கும் தொடர்பும் உறவும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஆசைப்படுகிறோம். உடனே நமது கற்பனை வானில் சிறகடித்து பறக்கிறது. அந்த மனிதரோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு விட்டதாக கருதுகிறோம். அவரை மதிப்பிற்குரிய ஒரு உயரிய உறவு நிலையில் வைத்து எண்ணிப் பார்க்கிறோம். ஒரு உண்மையான பக்தனின் நிலையும் இப்படித்தான் இருக்கும். இறைவனின் கல்யாண குணங்களை அறிந்தவுடன் அவரோடு நாம் ஐக்கியமாக வேண்டும். உறவு பாராட்ட வேண்டும் என்று துடிக்கிறோம்.

சரித்திர ஏடுகளில் அத்தகைய துடிப்பு பல ஞான புருஷர்களுக்கு ஏற்படுள்ளதை காணுகி றோம். ஆண்டாள், மீரா போன்றோர்கள் கார்மேக வண்ணனை காதலனாக எண்ணி கசிந்துருகி யதும். மகாகவி பாரதி கோகுலத்து நந்த குமாரனை தோழனாக தொண்டனாக அறிவுரை சொல்லும் ஆசிரியனாக கருதுயது. இதே ஆசைகளால்தான். ஆசை என்பது மனிதனை விலங்கிட்டு பூட்டும் சிறைச்சாலை என்றாலும் கடவுள் மீது கொள்ளுகின்ற ஆசையானது மனிதனை பந்தபாச தளைகளில் இருந்து விடுதலை செய்கிறது. இதை உணர்ந்துதான் "ஸ்ரீ வைஷ்ணவம்" கடவுளின் கருணைத்தன்மையை விவரித்ததோடு அல்லாமல் அவரிடம் பக்தர்கள் கொள்ளும் உறவு முறைகள் எப்படியிருக்க வேண்டும் என்றும் விவரிக்கின்றார்கள்.


மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்











இந்து சமயத்தில் உள்ள தத்துவப் பிரிவுகளின் மிகவும் முக்கியமானதாக கருதப்படும் "அத்வை தம்".

கடவுள் என்பவன் வெளியே இல்லை. உள்ளே இருக்கிறான். அதாவது அகம் பிரம்மாஸ்மி என்று சொல்கிறது. அதாவது இதனுடைய அர்த்தம் என்னவென்றால் கடவுளும் மனிதனும்ஒன்று தான். இதை மனிதன் உணராமல்இருக்கிறான் என்பதாகும். ஆனால் இந்த கருத்தைசைவ சிந்தாந்தமும் ஸ்ரீ வைஷ்ணவமும் ஏற்றுக் கொண்டதில்லை. இவர்கள் இருவரும் ஜீவன் வேறு இறைவன் வேறு என்று உறுதியாக வாதிடுகிறார்கள். அப்படி வாதிடும் போது கடவுளுக்கும் மனிதனுக் கும் உள்ள உறவுகளை ஆண்டான் அடிமை, தந்தை, மகன், தோழன், குரு சீடன் என்று நான்கு வகையாக பிரித்து கூறுகிறார்கள் அந்த உறவுகளை அடுத்த பகுதியில் விரிவாக பார்ப்போம்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 09442426434

# தூய அறிவும் தூய உணர்வும்

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "தூய அறிவு மற்றும் தூய உணர்வு ஆகிய இரண்டும் உள்ளுணர்வின் பண்புகளைக்கொண்டுள்ளன. தூய உணர்வு தூய அறிவைப் போன்றே தெளிவாகக் காண்கிறது. அநேக பெண்மணிகள் கூர்மையாக விருத்தி செய்யப்பட்ட உள்ளுணர்வைப் பெற்றுள்ளனர். அவர்கள் அளவுக்கு மீறிய மனக்கிளர்ச்சியை அடையும் போது மட்டுமே தமது உள்ளுணர்வு சக்திகளை இழக்கின்றனர். போதிய அளவில் விருத்தி செய்யப்பட்டால், தூய அறிவும்கூட உள்ளுணர்வே ஆகும். இல்லாவிட்டால், வாதத்தின் அடிப்படை தவறாக இருப்பின் முடிவும்கூட தவறாகவே இருக்கும். தெளிவாகப் பகுத்தறியும் ஒவ்வொரு மனிதனும் எப்போதும் தவறிழைக்காத உண்மையான உள்ளுணர்வை விருத்தி செய்வான்."

"பொறாமை, வெறுப்பு, கோபம் ஆகிவயவ்றைறைக்கொண்ட ஒரு பெண், மற்றவர்களிடத்திலும் இப்பண்புகள் பிரதிபலிக்கப்படுவதைக் காண்பாள். இத்தகைய அழிக்கும் தன்மையுடைய பண்புகளுக்கு தொடர்ந்து இடம் கொடுப்பாளானால், அவள், அந்தோ, தனது உள்ளுணர்வுக் கொடைகளை இழக்க நேரிடும்! இக்காரணத்திற்காக ஒவ்வொரு பெண்ணும் உணர்ச்சி வசப்படுதலைக் குறைத்துக்கொள்ளவும், தவறான உணர்ச்சிகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவும் முயலவேண்டும். அப்போது அவள் இறைவனுடைய தூய ஸ்ரீ அம்சத்தின் அந்த உள்ளுணர்வை விருத்தி செய்ய முடியும். என் அன்னை மிகச் சிறந்த உள்ளுணர்வைப் பெற்றிருந்தார். ஏனென்றால், அவர் பொறாமை, வெறுப்பு, கோபம் ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்றிருந்தார்."

அவர் தொடர்கிறார்:
"கடவுள் எவரையும் ஒருபோதும் கைவிடுவதில்லை. பாவம் செய்தபிறகு உங்களுடைய குற்றம் அளவு கடந்தது, விமோசனத்திற்கு அப்பார்ப்பட்டது என்று நீங்கள் நம்பும்பொழுதும்; மேலும் இவ்வுலகம் உங்களை ஓர் உதவாக்கரை என்று பறைசாற்றி, உங்களை ஒருபோதும் கணக்கில் எடுத்துக்கொள்ளமுடியாதென்று சொல்லும்பொழுதும் தெய்வீக அன்னையை நினைத்த ஒரு கணப்பொழுது நிதானியுங்கள். அவளிடம் கூறுங்கள், "தெய்வீக அன்னையே, நான் உன் குழந்தை. உனது விஷமத்தனமான குழந்தை, தயவு செய்து என்னை மன்னித்துவிடு." இறைவனின் தாய்மை அம்சத்திற்கு நீங்கள் வேண்டுகோள் விடுக்கும்போது அதற்கு எதிர்பேச்சே கிடையாது. தெய்வீக இதயத்தை நீங்கள் சுலபமாக உருகச்செய்து விடுகிறீர்கள். ஆனாலும் தொடர்ந்து நீங்கள் தவறில் ஈடுபட்டால் இறைவன் உங்களை ஆதரிக்கமாட்டான். பிராத்திக்கும் அதே சமயம் உங்களுடைய தீயச் செயல்களைக் கைவிடவேண்டும்."


www.aanmeegamalar.com

"குற்றத்தை ஒப்புக்கொள்வது ஓர் ஆரோக்கிய மான கொள்கையைக் கொண்டுள்ளது. குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பதை, ஆரோக்கிய விதிகளை மீறுவதால் அகவீனம் ஏற்படும்போது ஒரு மருத்துவரை அழைப்பதற்கு ஒப்பிடலாம். உங்களுடைய நோயின் அறிகுறிகளை மருத்துவரிடம் கூற நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அவர் உடனே மருந்தை உங்களுக்குத் தந்ததும் நீங்கள் குணமடைகின்றீர்கள். ஆனால், நீங்கள் இயற்கையைத் தவறான முறைகளில் மீண்டும் மீண்டும் மீறுவீர்களானால், நீங்கள் குணப்படுத்தப்பட்டிருப்பது எப்பொழுதும் நீடிக்காது, நான் விரும்பிய எதையும் நான் செய்ய முடியும் ஏனென்றால் அடுத்த வாரம் குற்றத்தை நான் ஒப்புக்கொள்ளும்பொழுது, நான் மன்னிக்கப்படுவேன்," என்று எப்பொழுதும் பீற்றிக்கொள்ளும் ஒரு சிறுவனை எனக்குத் தெரியும். இது தவறான கருத்து. நீங்கள் தீமையைக் கைவிட்டால், அதே சமயம் அதை ஒப்புக்கொள்வதை மட்டும் செய்வீர்களானால், நீங்கள்

136
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

மன்னிக்கப்படமாட்டீர்கள்.”

அவர் மேலும் கூறுகிறார்: “ தெய்வீகத் தன்மை வாய்ந்த மனிதன், தந்தை மற்றும் தாயாகிய இருவருக்குரிய பண்புகளை தன்னுள் வளர்த்துக்கொள்கிறான். தாய் தனது குழந்தைகளிடம் கொண்டுள்ள அதே அன்பை அவன் எல்லோரிடமும் உணர முடியும். நீங்கள் இறைவனின் அன்னை அம்சத்தை வளர்த்துக்கொண்டால், உலகிலுள்ள அனைத்து மக்களிடமும் நீங்கள் அன்பை உணர்வீர்கள். தெய்வீக அன்னையாக இறைவனிடம் நீங்கள் வேண்டுகின்றபொழுது, அவளுடைய இளகிய சுபாவத்திற்கும், நிபந்தனையற்ற அன்பிற்கும் வேண்டுகோள் விடுத்துள்ளதால், அவள் விரைவாக அருள்புரிகிறாள். இறைவனை அன்னையாக நீங்கள் வணங்கும்பொழுது, நீங்கள், “தெய்வீக அன்னையே, நல்லவனோ அல்லது கெட்டவனோ, நான் உன் குழந்தை. நான் தீமையின் பிடிகளில் பல பிறவிகள் இருந்திருக்கலாம்; அதற்காக உன் விதிமுறைகளுக்கேற்ப நான் முழுவதுமாக துன்பப்பட வேண்டுமா என்ன? உன் சன்னிதானத்தில் நுழைவதற்கு அவ்வளவு நீண்டகாலம் என்னால் காத்திருக்க முடியாது! அன்னையே தயவு கூர்ந்து என்னை மன்னித்துவிடு! நீ ஏன் என்னிடம் தண்டனையை நிர்பந்திக்கவேண்டும்? செய்தது செய்தாகிவிட்டது. இதுவெல்லாம் கடந்தகாலம். நான் மீண்டும் தவறிழைக்கப்போவதில்லை,” என்று அவள் முன் நின்று அவளைப் பார்த்துச் சொல்ல முடியும். தெய்வீக அன்னை பதிலளிக்கக்கூடும்.

“நீ துஷ்டன், என்னிடமிருந்து விலகிவிடு”. ஆனால் நீங்கள் கூற வேண்டும், “ நீ என்னுடைய தெய்வீக அன்னை. நீ என்னை மன்னித்தேயாக வேண்டும்.” அப்போது அவள் கூறுவாள், “ மோட்சத்தை என்னிடம் கேள். நான் உனக்கு மோட்சமளிப்பேன். ஞானத்தை என்னிடம் கேள், நான் உனக்கு ஞானத்தைத் தருவேன். ஆனால் என்னிடமிருந்து எனது அன்பை மட்டும் கேளாதே. ஏனெனில் அதை நீ எடுத்துக்கொண்டுவிட்டால் என்னிடம் வேறொன்றுமில்லை” (ஒரு யோகியின் சுயசரிதம் அத்தியாயம் 9)” உனது அன்பை நான் வேண்டி நிற்கின்றேன்!” “ எனத் தொடர்ந்து நீங்கள் கதறினால், தெய்வீக அன்னை இறுதியாக உருகுகிறாள்,” நீ எனது குழந்தை. நான் உனது பேரன்னை. ஆதலால் உன்னை மன்னிப்பதைத் தவிர நான் வேறு என்ன செய்ய


குருப்ரியா

முடியும்?” மேலும் தனது கடைசி உடைமையை உங்களுக்குத் தந்தருளுகின்றாள்ஞ்ஞ்ஞ். அவளது தெய்வீக அன்பு, “ என்கிறார் அன்புமிக்க குருதேவர்.

ஆன்மா பரிசுத்தமானது. குணங்களற்றது. இறைவனின் பிரதிபிம்பம். அப்படிப்பட்ட ஆத்மாவை சுமந்துகொண்டிருக்கும் சரீரம் எவ்வாறான மனதைக்கொண்டதாக இருக்கவேண்டும் என்று உறுதிப்படுத்துகிறார் குருதேவர். முன்வினைகளுக்கேற்பத்தான் மனம் அமையும். ஆனால் அதை தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். பகவத் கீதையில் ஒரு ஸ்லோகத்தில் கூறுவது என்னவெனில்

தூமேனாவ்ரியதே வன்னிர்ய தாதர்சோ மலேன
யதோத்பேனாவ்ருதோ கர்பஸ்ததா
தேனேதமாவிருதம்.

புகையினால் நெருப்பும், அழுக்கினால் கண்ணாடியும் கர்ப்பத்திலிருக்கும் குழந்தையைப் பொதிந்துள்ள உறை போன்றுதான் ரஜோகுணத்தால் ஞானம் மறையப்படுகிறது. நெருப்பிற்கு பிரகாசம் உண்டு. ஆனால் அதை மூடியிருக்கும் புகை அடங்கும்போதுதான் நெருப்பு பிரகாசிக்க முடியும். பொருட்களை பிரதிபலிக்கச் செய்கின்ற சக்தி கண்ணாடிக்குள்ளது. ஆனால் அழுக்கு நீங்கி பரிசுத்தமானால் பொருட்கள் பிரதிபலிக்கும். ஆனால் அழுக்கு நீங்க வேண்டும். நீங்கினால் மட்டுமே கண்ணாடியால் பொருட்களை பிரதிபலிக்கச்செய்யமுடியும். கர்ப்த்திலிருக்கும் சிசு வெளியில் வரவேண்டுமென்றால் அதைப் பொதிந்துள்ள உறை உடைய வேண்டும். அது போன்று ஒருவனிடத்திலுள்ள விஞ் ஞானம் பிரகாசித்து அவனுக்கு பயன்பட வேண்டுமென்றால் அதனை பொதிந்திருக்கின்ற ரஜோகுணம் நீங்கவேண்டும். அது நீங்காமலிருக்கும்வரையில் தன்னில் விஞ்ஞானமுண்டு என்று கூறுவதில் பயனில்லை. புகை அடங்கினால் நெருப்பு பிரகாசிப்பதற்கும் அழுக்கு நீங்கினால் கண்ணாடி பொருட்களை பிரதிபலிக்கச் செய்வதற்கும் உறை உடைந்தால் குழந்தை வெளியில் வருவதற்கும் பிரயத்னம் தேவையில்லை. அதுபோல் ரஜோகுணமாகின்ற ஆவரணம் நீங்கினால் விஞ் ஞானம் பிரகாசிப்பதற்கும் பிரயத்னம் தேவையில்லை. அது நீங்காமலிருக்கும்காலம்வரை எவ்வளவு பிரயத்னம் செய்தாலும் பலனில்லை. அதனால் ரஜோகுணமாகின்ற உறையை



நீக்குவதற்காகத்தான் பிரயத்னம் தேவை என்று சொல்வது (பகவத் கீதை அத்.3 ஸ்லோகம் 38

கீதையில் கூறியுள்ளவாறு ஒரு மனிதனுக்கு சாத்தியமானால் இறைவனின் தூயஷிஅம்சத்தின் அந்த உள்ளுணர்வை விருத்தி செய்ய முடியும். அதை குருதேவர் மற்றவர்களுக்காக வலியுறுத்திக் கூறுகிறார்.

எது நடந்தாலும் அவற்றை மனதளவில் எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் இரும்பு துரு பிடிப்பது போன்று மனமும் துருபிடித்ததுபோலாகும். கத்தியை தினமும் பயன்படுத்தினால் துருபிடிக்காது. பயன்படுத்தவில்லை என்றால் துருபிடித்துவிடும். அதேபோல் நம் மனதையும் வைத்துக்கொள்ளவேண்டும். அதற்கு ‘திதிக்ஷா’ மிகவும் தேவை. திதிக்ஷா என்றால் பொறுமை, அல்லது சகிப்புத் தன்மை எனப்பொருளாகும். இந்த திதிக்ஷாவிற்கு ஒரு சிறு கதை உள்ளது. அதை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

ஒரு மான் தன் குட்டி மானுடன் புல் மேய்ந்து கொண்டிருந்தது. அப்பொழுது சிறிது தூரத்தில் ஒரு புலி மானை தனக்கு இரையாக்கிக்கொள்வதற்காக பாய்வதற்குத் தயாராக இருந்தது. அதன் எதிரில் ஒரு வேடன் அம்பை எய்து மானைப்பிடிக்கத் தயாராக இருந்தான். மற்றொரு புறத்தல் அருவி ஒழுகிக்கொண்டிருந்தது. அதன் எதிரில் பெரிய ஒரு காடு தீபிடித்து எரிந்து கொண்டிருந்தது. வேடனிடத்திலிருந்தும் புலியிடத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள மானுக்கு வழியேதுமில்லை. ஒரு பக்கம் ஓடினால் அருவியும் அதன் எதிர்ப்க்கத்தில் நெருப்பால் எரியும் காடும் உள்ளது. மான் நினைத்தது, “நமக்கு ஆண்டவன் என்ன விதித்துள்ளானோ அது றடக்கும். எது நடந்தாலும் நடக்கட்டும். நாம் பொறுமையாக புல் மேயலாம்.” சிறிது நேரத்தில் ஒரு பயங்கரமான இடி இடித்தது. அந்த இடிச் சப்தத்தில் வேடன் கையிலிருந்த அம்பு அவன் கையிலிருந்து புலிமேல் பாய்ந்தது. புலி இறந்தது. இடி இடித்த உடனே பெரிய மழை பெய்தது. காட்டிலிருந்த நெருப்பு அனணந்தது. மான்களுக்கு ஓடித் தப்பித்துக்கொள்ள மூன்று வழி திறந்தது. மான்கள் தப்பித்தன. இறைவனின் கருணையால் மான்கள் தப்பித்துக்கொண்டன.

இந்தக் கதையில் கூறப்பட்டுள்ள கருத்திற்கிணங்க நாம் அனைவரும் திதிக்ஷா அல்லது பொறுமையுடன் இருந்து தார்மீக வாழ்க்கை வாழ்ந்தால் நமக்குள் இருக்கும் இறைவன் நம்மை காக்கும் என்பது உறுதி. விருப்பு வெறுப்பில்லாத பொறுமையுடன் இருந்தால் நமக்கு நிச்சயம் இறைவன் வெளிப்படுவான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# உயர்வான நோக்கம் போதும் செயலைப்பற்றி கவலை வேண்டாம்

ஒரு முறை நாரத மகரிஷி கவலையுடன் காணபட்டார். அவரது கவலையை கண்ட அன்னை மஹாலக்ஷ்மி ''மகனே ஏன் கவலையாக இருக்கிறாய்'' என்று கேட்டாள்.

நாரதர் ''தாயே நான் செய்யும் செயல்கள் யாவும் இறுதியில் நன்மையில் முடிந்தாலும் அந்த நேரம் ஏற்படும் கலகங்களுக்கு நான் தானே காரணமாக விளங்குகிறேன் அதை எண்ணித்தான் வருத்தமாக உள்ளது தாயே'' என்றார்

மஹாலக்ஷ்மி ''நாரதா அப்படி என்றால் ஒன்று செய் ரிஷிகேசம் சென்று புனித கங்கையில் நீராடி விட்டு வா உன் கவலையாவும் போய்விடும் பாரேன்'' என்றாள்

நாரதரும் ரிஷிகேசம் வந்தார் .

கங்கையில் நீராடலாம் என்று நினைக்கும் போது பல வண்ணங்கள் கொண்ட விசித்திரமான மீன் ஒன்று நீரில் நீந்திக்கொண்டே நாரதரிடம் ''என்ன நாரதரே சௌக்கியமா'' என்றது.

பேசும் மீனை அதிசியமாக பார்த்துக்கொண்டே நாரதர்.

''ம்ம் எதோ சௌக்கியமாக இருக்கிறேன் நீ நலமா மீனே'' என்று நாரதர் திருப்பி மீனிடம் கேட்டார் மீன் கொஞ்சம் சலித்து கொண்டே ''நானும் எதோ நலமாக இருக்கிறேன் நாரதரே'' என்றது

நாரதர் ''ஏன் மீனே உன் சலிப்புக்கு என்ன காரணம் ஏதாவது தேவையா என்று சொல் நான் வரவழைத்து தருகிறேன்'' என்றார்.

மீன் ''நாரதரே என் நலத்தில் ஒன்றும் குறைச்சல் இல்லை, ஆனால் ஒரே தாகமாக இருக்கிறது குடிக்க தண்ணீர் தான் கிடைக்க மாட்டேங்கிறது அதுதான்



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

என் சலிப்புக்கு காரணம்'' என்றது மீன்.

மீன் கூறியதை கேட்டதும் நாரதருக்கு கோபம் வந்தது ''என்ன மீனே என்னிடமே விளையாடுகிறாயா?!!

நீருக்குள் நீந்தி கொண்டே தாகத்துக்கு நீர் கிடைக்கவில்லை என்று என்னிடம் சலித்து கொண்டு சொல்கிறாயே உன் முட்டாள் தனத்தை என்னவென்று சொல்வது?!!''

மீன் சிரித்துக்கொண்டே ''நீர் மட்டும் என்ன வாம் பேரானந்தம் தரும் நாராயண மந்திரத்தை உம்முள் வைத்துக்கொண்டே கவலையாக எதோ நலமாக இருக்கிறேன் என்று கூறுகிறீரே நீர் கூறுவது மட்டும் நியாயமோ'' என்று கேட்க,

நாரதர் வியப்புடன் மீனை பார்க்க மீன் உருவம் மறைந்து, திருமால் நாரதர் முன் காட்சியளித்து

''நாரதா என் பெயரை கூறி கொண்டு நீ செய்யும் செயல்கள் யாவும் நன்மையில் தானே முடிவடைகிறது கலகம் என்பது அவர் அவர்கள் மனநிலையை பொறுத்து உள்ளது அதை நினைத்து நீ வருந்தி என்ன பயன் யாவரும் நலம் பெறவேண்டும் என்று எண்ணி தானே நீ உன் கலகத்தை துவக்குகிறாய்.

உன் நோக்கம் உயர்வாக இருக்கும் போது அதில் நடக்கும் செயல்களை கண்டு நீ ஏன் வருந்தவேண்டும்'' என்று கூறி நாரதரை திருமால் ஆசிர்வதித்து விட்டு மறைந்து போனார்.

நாரதரும் உள்ளம் தெளிவடைந்து புனித கங்கையில் நிம்மதியாக ஆனந்தமாக நீராடினார்.

# கண்திருஷ்டியால் ஏற்படும் பிரச்சனையும், கண் திருஷ்டியை போக்கும் தாந்திரி முறையும்

கண்திருஷ்டி என்பது மகிழ்ச்சியை, சந்தோஷத்தை தடுக்கும் ஒருவித தடைக்கல் என்று கூறலாம், இந்த கண்திருஷ்டி என்பது ஒருவரை அறியாமலேயே மற்றவருக்கு பாதிப்புஏற்படுத்தும்.

கண் திருஷ்டியை போக்கி விட்டால் போதும் சந்தோஷத்திற்கு பின்னால் பெரிய கஷ்டம் எதுவும் வராமல் இருக்கும்.

அதற்கு ஒரு தாந்திரீக ரீதியான முறை உள்ளது. இந்த பரிகாரத்தை செய்ய நமக்கு தேவை **1 மா இலை, வேப்ப எண்ணெய்,** கசப்பான சம்பவங்களை பொசுக்கூடிய தன்மை வேப்பெண்ணெய்க்கு உண்டு.

ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே ஒரு மா இலையின் மேலே வேப்பெண்ணெயை முழுமையாக தடவிவிட்டு இந்த இலையை ஒரு தட்டின் மேல் வைத்து வீட்டின் ஏதாவது ஒரு மூலையில் வைத்துவிடுங்கள். இது ஞாயிற்றுக்கிழமை முழுவதும் உங்களுடைய வீட்டில் அப்படியே இருக்கட்டும்.

ஞாயிற்றுக்கிழமை இரவு தூங்க செல்வதற்கு முன்பாக ஒன்பது மணிக்கு மேல் இந்த மா இலையைக் கொண்டு போய் அப்படியே நிலை வாசலுக்கு வெளியே வைத்து ஒரு கற்பூரத்தை வைத்து எரித்து விடுங்கள்.

உங்கள் வீட்டை பிடித்திருக்கும் கண்திருஷ்டி கெட்ட சக்தி எதிர்மறை ஆற்றல் அனைத்தும் இந்த மாஇலையோடு பொசுங்கிப் போய்விடும்.

மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை இப்படி செய்தாலே போதும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் குறையும். சந்தோஷம் அதிகரிக்கும். மன நிம்மதி கிடைக்கும். பணப் பிரச்சனை நீங்கும். கடன் சுமை குறையும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகள் உங்கள் சொல்படி கேட்டு நடப்பார்கள்.

அக்கம்பக்கம் வீட்டில் இருப்பவர்களுடைய எதிர்மறையான எண்ணங்கள் உங்கள் குடும்பத்தை தாக்காது. இந்த பரிகாரத்தை மூன்று மாதங்கள் செய்து பாருங்கள் நல்ல பலன் கிடைக்கும்.

இதே போல உங்களுடைய வீட்டின் நிலை வாசலில், வெள்ளிக்கிழமை பூஜை செய்வதற்கு முன்பாக மாஇலைத் தோரணம் கட்டி வரும் பழக்கத்தை கொண்டு வாருங்கள். இது உங்களுடைய வீட்டிற்கு முழுமையான நிரந்தரமான லட்சுமி கடாட்சத்தை கொடுக்கும்.






# ஆன்மிக தேடலில் புதிய அடையாளம் அதிக வாசகர்களை கொண்ட

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

## வெளியிடும்

**மகாசித்தர் கட்டிக்குளம் தவத்திரு**
**சூட்டுகோல் மாயாண்டி சித்தர்**
**165-வது அவதாரவிழா சிறப்பு மலர்**

*அழகிய வண்ணத்தில் அச்சிடப்பட்ட புத்தகம்*

பெற தொடர்பு கொள்ளுங்கள்

**9976519601 / 9994162182**

# கருடன், நந்தியைப் போன்று இரு

டில்லி எருமை, ஓங்கோல் பசு, சிந்திக் காளை இவைகள் அனைத்துமே அவைகளுக்குச் சிறப்பு பெயர். இப்பெயரினைப் பெற்று, திட்டு வாங்கும் மனிதன். பெயரளவில் கூட அவைகளின் சிறப்பினைக் கொள்ளாமல் இருக்கிறான். புத்தியுடன சிந்தி... டில்லி பசு, காளை போன்று சுற்றி வரலாம்.

❖ ❖ ❖

பக்தி ஒன்றே மனிதனுக்கு ஆதாரம் என்பது..ஆதாரமான இறைவனை கண்டபின் அறிவிற்குத் தெரிந்துவிடுகிறது. இட்லியிருந்து வடை, வடையிலிருந்து இட்லி என்று மகிழ்வுடன் ஈ பறப்பதைப் போன்றதே இது.

❖ ❖ ❖

பறக்காத பறவைக்குப் 'பறவை' என்ற பெயரே இல்லை. பறக்காத ஒன்றுக்கு புத்தி இல்லை என்றால், மிருகம் என்றே பெயர்.

❖ ❖ ❖

புத்தி உள்ள மனிதன் சிந்தித்தால், அவன் தேவனா? மனிதனா? என்பது தெரிந்துவிடும்.

❖ ❖ ❖

இறைவனை எண்ணுவதனால் இதயம் சிவந்தே துடிக்கிறது. இறைவனை நினைக்காத நீல இதயத்தை ஆண்டவன் படைப்பதே இல்லை.

❖ ❖ ❖

சிந்தனையின் பெரிய கோயில் புத்தி.

❖ ❖ ❖

ஏழை முதல் பணக்காரன் வரை இறந்துவிட்டான் என்பதால், இறந்தவன் மீது உள்ள ஆடையை எவரும் நகர்த்துவதில்லை. அதுபோல் எனது கருத்துக்களை, நிரந்தரமாய் வைத்துக் கொள்ளுகின்ற சபதம் எந்த நூற்றாண்டிலும் இருக்கிறது.

❖ ❖ ❖

பட்டாம் பூச்சியைப் பார்த்தே மகிழ்வது போல், உலகையும், பொருளையும் பார்த்தே சிந்தி.

❖ ❖ ❖

பட்டாம் பூச்சியின் உள்ளமான அதன் இறக்கையை எடுத்துவிட்டால் இறந்துவிடும். அதுபோல் பக்தனின் உள்ளத்தில் இறைவன் இருந்தால் தான்... அவன் வாழுவான்.

❖ ❖ ❖

கருடனைப் போன்று மௌனமாய் இறைவனை உள்ளத்தில் சுமந்துகொண்டே இரு.
நந்தியைப் போன்று மௌனமாய் இறைவனை பார்த்துக் கொண்டே இரு

❖ ❖ ❖

கிழிந்த துணியை, ஊசி நூல் கொண்டு தைத்தால் கட்டிக் கொள்ளலாம். அதுபோல் பேசிக் கிழித்துத் தள்ளும் வாயை மனமென்னும் ஊசியுடன் சேர்த்தால் இறைவனையே காணலாம்.



❖ ❖ ❖

வெட்டிப் பேச்சுக்களை எல்லாம் விடு. வேர் உள்ள பேச்சுக்களெல்லாம் உனது

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

முன்னேற்றத்தின்
விழுதுகள் என உணர்வாய்.

❖ ❖ ❖

பேசிக் கொண்டே இரு.
சாதனைகளை நிகழ்த்தாத பேச்சுக்களை எல்லாம்
மௌனம் என்று உணர்ந்துவிடு.

❖ ❖ ❖

புத்தி பழுதுபட்டால் சிந்தனை கெடுவது ஒரு
பக்கம். மற்றொரு பக்கம் மனதைக் கரையான்
அரித்து அரித்து. அது கரையான் புற்றாக
மாறிவிடுகிறது. இதில் கரையான், பாம்பு, தேள்
இவைகளைத் தவிர ஆண்டவன்
இருக்க நியாயம் இருப்பதில்லை.

❖ ❖ ❖

மனிதனிடம் மனவீடு, சிந்தனை என்ற இரண்டு
வீடுகள் இருக்கின்றன. இப்பொழுது சிந்தனை
வீடு கெட்டிருப்பதால் மனிதனின் மனவீட்டில்
“இறைவன்” குடியேறுவதில்லை.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

❖ ❖ ❖

ஜாக்கிரதையான பக்தி, தீவிர பக்தி என்று இரண்டு
பக்திகள் உண்டு. ஜாக்கிரதையான பக்தியில்
உலகம் முன்னே வைக்கப்பட்டு கடவுள் பின்னே
தள்ளப்படுகிறான்.

❖ ❖ ❖

தீவிர பக்தியில் கடவுள் முன்னே வைக்கப்பட்டு,
உலகம் பின்னே தள்ளப்படுகிறது.

❖ ❖ ❖

சிந்தனைக்குத் தந்திரம் செய்து சிந்திக்கவே
முடியாது. அதனால் மந்திரமும், கடவுளும்,
சிந்தனையை வரவேற்கிறார்கள்.

❖ ❖ ❖

பயமென்னும் பேயை உன்னிடமிருந்தும்,
சமுதாயத்திடமிருந்தும் ஒட்டு. அனைத்துமே
சரியாகிவிடும்.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்
நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.
தொடர்பு கொள்ளவும்
9444228203

www.aanmeegamalar.com

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# ஆவுடையாருக்கு மட்டும் அபிஷேகம் நடைபெறும் சிவஸ்தலம்

காஞ்சிபுரம் சென்னையில் இருந்து 80 கி.மி. தொலைவில் இருக்கிறது. அருள்மிகு ஏலவார்குழலி அம்மன் உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயில், சென்னையில் இருந்து ரயில் மற்றும் பேருந்து வசதிகள் அதிகம் இருப்பதால் இத்தலத்திற்குச் செல்வது மிகவும் எளிது.

மூலவர் அம்பாள் பிரதிஷ்டை செய்து வழி பட்ட பிருதிவி (மணல்) லிங்கம் ஆகும்.

சுந்தரருக்கு இடக்கண் ஒளி பெற்ற தலம்.

இது முக்தி தரும் தலங்கள் ஏழினுள் முதன்மை பெற்றது.



ஒவ்வொரு கோவிலுக்கு ஸ்தலவிருட்சம் என்று ஒரு மரம் உண்டு, அந்த வகையில் இந்தக் கோவிலில் ஸ்தலவிருட்சம் என போற்றப்படுவது 3,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த மாமரம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவால யங்களில் இது 234 வது தேவாரத்தலம் ஆகும்.

தேவாரப்பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இது முதல் தலம்.

இறைவர் திருப்பெயர்: ஏகாம்பரநாதர், திரு வேகம்பர், தழுவக்குழைந்த நாதர்.

இறைவியார் திருப்பெயர்: ஏலவார்குழலி, காமாட்சியம்மை.

தல மரம்: மா மரம் (வேதம் இம்மரம் உள்ளது.)

தலவரலாறு

மூலவர் அம்பாள் பிரதிஷ்டைசெய்து வழிபட்ட பிருதிவி (மணல்) லிங்கம் ஆகும். இங்கு உள்ள சிவபெருமானை பிருத்வி லிங்கம் என்று அழைப்பர். அதனால் இந்த சிவபெருமானுக்கு அபிஷேகங்கள் நடப்பது கிடையாது. மாற்றாக லிங்க வடிவில் உள்ள ஆவுடையாருக்கு அபி ஷேகங்கள் நடைபெறும். மேலும் இங்கு மற்ற கோவில்களைப் போல அம்மனுக்கு என்று தனியாக சந்நிதி கிடையாது. பார்வதி திருக்கைலாயத்தில்சிவபெரு மானின் கண்களை விளையாட்டாக மூடியதால் உலகம் இருளில் மூழ்கி யது.

சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்து உலகத்துக்கு வெளிச்சம் தந்தார். இந்த தவற்றினால் பார்வதி யை உலகத்துக்குச் சென்று தன்னை நோக்கி தவம் இருக் கச் சொன்னார் சிவபெருமான். பார் வதியும் காஞ்சி புரத்தில் கம்பா நதிக் கரையில் ஒரு




மாமரத்தின்அடியில் மணல் லிங்கம் செய்து பூஜித்தார். பார்வதியின் தவத்தை உலகினுக்கு அறியச் செய்ய சிவ பெருமான் கம்பா நதியில் வெள்ளத் தை உண் டாக்கினார்.

பார்வதி தனது மணல் லிங்கத்தை வெள்ளம் அடித்து செல்லாமல் இருக்க கட்டி அணைத்துக் கொண்டார். உடனே சிவபெருமான் அந்த மாமரத் தின் அடியில் தோன்று பார்வதிக்கு அருள் புரிந்து, இரண்டு படி நெல்லைக் கொடுத்து காமாட்சி என்ற பெயரில் காமகோட்டத்தில் 32 அறங்களைச் செய்ய பணித்தார். பார்வதி வழி பட்ட மணல் லிங்கம் தான் பிரித்வி லிங்கம், அந்த மாமரம் தான் ஸ்தல விருட்சம்.

இது முக்தி தரும் தலங்கள் ஏழனுள் முதன் மை பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சியாரை மணந்த போது "உன்னைப் பிரியேன்" என்று சிவனை சாட்சியாக வைத்து சத்தியம் செய்தார். அந்த சத்தியத்தை மீறியதால் அவர் கண் பார்வை இழந்தார். இழந்த பார்வையில் இடக்கண் பார்வையை சுந்தரர் இங்கு பதிகம் பாடி பெற்றதாக வரலாறு உண்டு.

காஞ்சிபுரத்திலுள்ள பழமையான கோயில்களுள் ஒன்று. பல்லவர் காலத்திலேயே சிறப்புற்றிருந்ததாகக் கருதப்படும் இக்கோயில், இரண்டாம் நரசிம்ம பல்லவனால் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயிலுக்குப் பிற்பட்டது எனக் கருதப்பட்டாலும், இக்கோயில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட, இம்மன்னன் காலத்துக்கு முற்பட்ட கல்வெட்டுக்கள், இவ்விடத்தில செங் கல்லால் கட்டப்பட்ட கோயிலொன்று முன் னரே இருந்திருக்கலாமோ என்ற ஐயப்பாட்டை வரலாற்றாய்வாளர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

எப்படியும் இக்கோயில் 1300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை உடையது என்று கருதப்படு கின்றது. இக்கோயிலிலே பல்லவர் காலந் தொட்டு நாயக்கர்காலம் வரை பல்வேறுமன்னர்களும் திருப்பணி கள் செய்தமைக்கு ஆதாரமாக அவர்களுடைய கல்வெட்டுக்கள் பல இவ்வளாகத்தினுள் காணப் படுகின்றன. இக்கோயிலின் தெற்கு வாயிலில் காணப்படும் பெரிய இராஜகோபுரம், விஜயநகர அரச னான கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது. இதன் காலம் கி.பி 1509 எனக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகின்றது. இங்கே விஜயநகர மன்னர் காலத்திய



ஆயிரங்கால் மண்டபம் ஒன்றும் உண்டு. இம்மண்டபம் அதற்கு முன், நூற்றுக்கால் மண்டபமாக இருந்ததாகவும், அது பிற்காலச் சோழர்களால் கட்டப்பட்டுப் பிற்காலத்தில் திருத்தப்பட்டதாகவும் தெரிகின்றது.


ஒவ்வொரு கோவிலுக்கு ஸ்தலவிருட்சம் என்று ஒரு மரம் உண்டு, அந்த வகையில் இந்தக் கோவிலில் ஸ்தலவிருட்சம் என போற்றப்படுவது 3500 ஆண்டுகள் பழமை வாய்ந்த மாமரம். இந்த மாமரத்தில் நான்கு கிளைகள் உள்ளன. வெவ்வேறு காலங்களில் இந்த மாமரத்தில் உள்ள நான்கு கிளைகளில் நான்கு விதமான மாம்பழங்கள் உருவாகும் என்பது இதன் சிறப்பு.

இந்த நான்கு கிளைகளும் ரிக், யஜுர், சாம, அதர்வண எனும் நான்கு வேதங்களை குறிக்கின்றன. இந்தக் கோவிலின் கிழக்கு கோபுரமான இராஜ கோபுரம், 58.5 மீட்டர் உயரமும் ஒன்பது அடுக்குகளையும் கொண்டது. மூலவர் அம்பாள் பிரதிஷ்டை செய்து வழிபட்ட பிருதிவி (மணல்) லிங்கம் ஆகும்.தல புராணம் மா மரத்தைத் தலமரமாக (ஏ+ஆம்ரம்= மாமரம்) கொண்டுள்ளதால் ஏகாம்பரம் எனப் பெற்றது. கச்சி என்பது ஊரின் பெயர் .சுந்தரருக்கு இடக் கண் ஒளி பெற்ற தலம்.பிரம்மா, திருமால், ருத்திரர் பூசித்த இலிங்கங்கள் முறையே வெள்ளக்கம்பம், கள்ளக்கம்பம், நல்லக்கம்பம் எனப் படுகின்றன.

சக்தி பீடமாகிய காமக்கோடிப் பீடம் உள்ள தலம். நால்வர் பெருமக்களாலும் பாடப் பெற்றத் திருத்தலம்.

– சிவத்திரு.
குமரேசன் இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி,
சென்னை, போன்: 919003296221

easanaithedi.in




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

# இணையதளத்தை

# பார்க்கவும்










சிவத்திரு.குமரேசன்




## திருமணத் தடையை நீக்கும்

# சிவபெருமான், பெருமாள்

உண்மை அடியாரைச் சார்ந்தே இருக்கும் அருட்பெரும் தெய்வமான சிவபெருமான், அடியார்களை சோதித்த பின்பே, புடம் போட்ட தங்கமாய்ப் புத்தொளி வீசச் செய்கின்றார். பக்தியின் உத்தம நிலையை ஒரு பக்தன் அடைந்த பின்பே அவன் மீது கருணைப் பொழியும் பண்பினைப் பெற்ற எம்பெருமான் இம்மண்ணின் துயரங்கள் களைந்திடவே தலந் தோறும் எழுந்து தயை பிரிகின்றார்.

அப்படிப்பட்ட அதி உன்னதத் தலங்களுல் ஒன்றாகத் திகழ்கின்றது திருவைகல் மாடக் கோவில்.

கோட்செங்கசோழன் கட்டிய 70 மாடக் கோவில்களுள் ஒன்றாகத் திகழும் இந்த வைகல் மாடக்கோயில் ஈசன் மீது பதிகம் பாடிப் பரவியுள்ளார் ஆளுடையப் பிள்ளையாரான திருஞானசம்பந்தர். அதோடு அப்பர் பெருமானும் பாடிப் பரவிய தலமிது.

இந்த மாடக்கோவிலை "வடமலை அனைய நன்மாடக் கோவிலே" என கயிலைமலைக்கு இணையாகப் பாடிய ஆளுடைய பிள்ளையார் மேலும், "வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசை செய்ய கண்வளவன் முன் செய்த கோயிலே" என உலகத்தில் உள்ள உயிரினங்கள் மகிழ்வுற எழுந்தருளியதாகவும் எடுத்துறைக்கின்றார்.

திருநாவுக்கரசர் தனது திருவீழிமிழலை திருத்தாண்டகத்தில் கயிலை நாதனை இந்த வைகல் மாடக்கோவிலில் காணலாம் என போற்றிருப்பது சிறப்பு. க்ஷேத்திரக்கோவையிலும் இத்தலத்தினை நினைத்துப் போற்றுகின்றார்.

சைவ சமய சந்தானக் குறவர்களுள் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் அருளிய சிவக்ஷேத்திர கோவையிலும் இத்தலம் பாடப்பெற்றுள்ளது.

சோழவளநாட்டின் காவிரி தென்கரை தேவாரத் திருத்தலங்களில் 33வது தலமாகத் திகழ்கின்றது இந்த "வைகல் மாடக் கோவில்".

ஈசனுக்கு திரிநேத்திரங்கள் [மூன்று கண்கள்] இருப்பது போல இந்த வைகலில் மூன்று சிவாலயங்கள் இருப்பது சிறப்பு. இங்கு வைகல் மாடக்கோவிலோடு, பெரியநாயகி உடனுறை பிரம்மபுரீஸ்வரர் ஆலயமும், விசாலாக்ஷி உட னுறை விஸ்வநாதர் ஆலயமும் ஒருங்கே அமையப்பெற்றிருப்பது விசேடம்.

திருமால், பிரம்மா, திருமகள் ஆகியவர் களோடு, இந்திராதி தேவர்களும், அகத் திய முனிவரும் போற்றி வழிபடபெற்ற திருக் கோவிலிது. தேவர்கள் ஈசல் வடிவில் இங்கு வழிபாடு செய்துள்ளனர்.

ஆதியில் செண்பகவனமாகத் திகழ்ந்த இத்தலத்தில் நம்மையெல்லாம் தாங்கும், ஆதார சக்தியாக விளங்கும் அன்னை பூமா தேவி ஒரு சமயம் திருமாலை மரம் புரிந்திட






ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வேண்டி, ஈசனை நோக்கி தவமிருந்து, திரு மாலை மணந்து கொண்டாள். இதனால் கோவிந்தன் மீது கோபமுற்றால் திருமகள். உடன் இந்த செண்பகாரன்யம் அடைந்து, சிவனாரை நினைத்து, கடுந்தவம் இயற்றினாள். திருமகளைத் தேடி திருமால் இங்கு வந்து, ஈசனை வணங்கினார். உடன் வந்த பிரம்மனும் இங்கே இறைவனை வழிபட்டு நின்றார். மகா தேவர் தோன்றி, திருமகளை சாந்தப்படுத்தி, திருமாலோடு இணைத்து வைத்தார்.

திருமகளையும், நில மகளையும் இரு மனைவி யராய் திருமால் கொண்ட தலமிது.

ஊரின் மேற்கே அழகற அமைந்துள்ளது வைகல் மாடக்கோவில். தோரண வாயிலுடன் அமைந்த ஆலயம். உள்ளே நடுவாக அமையப் பெற்ற உயரிய மேடை. வலப்பக்கம் படிகள். ஏறிச் சென்றால் நந்தி மண்டபம். நேராக மையத்தில் அமைந்துள்ளது ஐயன் சன்னிதி.

உள்ளே செல்ல.... மூடுதளத்துடன் ஆன அழகிய முன் மண்டபம். கருவறையை நோக்க... இறைவன் வைகல்நாதர் கிழக்கே திருமுகம் காட்டி, வழவழ லிங்கத் திருமேனி கொண்டு, அற்புதக் காட்சி தருகின்றார். வைகல்நாதர் என்று அழைக்கப்பெறும் இப்பெருமான் செண்ப காரண்யேஸ்வரர் என்றும் அழைக் கப்படுகின்றார்.

மாடக்கோவிலை வலம் வருகை யில் அம்பிகையின் தனிச் சன்னிதி மாடக்கோவிலின் வலப்புறம் கிழக்கு நோக்கிஅமையப்பெற்றுள்ளது.

சன்னிதியுள் அழகிய வடிவில் எழிலுற தரிசனமளிக்கின்றாள் அன்னை ஸ்ரீ கொம்பியல் கோதை. அப்பன் ஈசனை அன்னை மணக் கும் திருக்கோலம் இது. அற்புத அமைப்பு.

திருமால் தன் துணைவியர் இருவருடன் வரதராஜராகக் காட்சித் தருவது சிறப்பு. கன்னிமூல கணபதி மற்றும் வள்ளி தெய்வானையுடனான சுப்ரமணியரும் இங்கு தரிசனம் அளிக்கின்றனர். ஆலய வளாகத்துள், சுற்றிலும் நந்தவனம் அமைக்கப்பட்டு, இயற்கை எழில் கொஞ்சுகின்றது. அமைதியானதொரு சூழல். அம்மையப்பரின் அதியற்புத தரிசனம். மனம் ஏகாந்தத்தில் திளைக்கின்றது.

இந்து சமய அறநிலைத்துறையைச் சார்ந்த இக்கோவிலில் நித்திய நைமித்திய பூஜைகள் யாவும் சிறப்புற நடைபெறுகின்றன.

தலத்தின் விருட்சமான செண்பக மரம் முன்பு இருந்தது. தற்போது இல்லை. தல தீர்த்த மான பிரம்ம தீர்த்தம் கோவிலின் வடபால் அமைந் துள்ளது. 2006 ஆம் ஆண்டு இவ்வாலய குட முழுக்கு நடைபெற்றுள்ளது.

இத்தலத்தில் எழுந்தருளும் ஸ்ரீதேவி பூதேவி உடனான வரதராஜப் பெருமாள் மற்றும்கஜலட் சுமிக்குத் திருமஞ்சனம் செய்து, பால் பாயசம் நைவேத்தியம் செய்து வழிபட... வெகுநாளையத் திருமணத்தடை நீங்கும். திருமாங்கல்ய பாக்கி யம் கைகூடும்.

சிவபெருமானுக்கு ருத்ராபிஷேகம் நடத்தி, சுக்கிர ஹோமம் செய்ய, பலமான களத்திர தோஷம் நீங்கி, திருமணம் விரைவில் நடைபெறும்.



மோ.கணேஷ்

இத்தல அம்பிகைக்கு பொன்மாங் கல்யம் சாற்றி, பிரார்த்திக்க ஜாதக ரீதியாக ஏற்படும் மாங்கல்ய தோஷம் நீங்கும். கும்பகோணம் காரைக்கால் பேருந்து சாலையில் எஸ். புதூருக்கு அருகே உள்ள பழியஞ்சியநல்லூரில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது வைகல் மாடக்கோவில்..

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# அம்பாளை கரம்பிடிக்க சதுரங்கம் விளையாடிய சதுரங்கநாதர்

உலக மதங்களில் இல்லாத பல்வேறு சிறப்புகள் நமது இந்து மதத்தில் உள்ளது, கடவுளை மட்டும் அல்ல, இயற்கையையும் கடவுளாக பாவித்து வணங்கும் வேலையில், விளையாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது இந்து மதம், மனிதர்களின் அறிவு, உடல் வலிமை போன்ற விளையாட்டையும் தெய்வத்திற்கு ஈடாக வழிபட்டுள்ளனர் நமது முன்னோர்.

காளை பிடித்தல், ஜல்லிக்கட்டு, கபடி, பல்லாங்குழி, தாயம், இன்னும் பல்வேறு விளையாட்டுக்களை இறைவனுடன் தொடர்பு படுத்தி கலாச்சாரம், பண்பாட்டுடன் பிண்ணிப் பிணைந்து விளையாடியுள்ளனர்.

அந்த வகையில் சதுரங்கம் விளையாட்டை போர் விளையாட்டாகவே அறிமுகப்படுத்தி, போர் நடைபெறும்போது எந்த வழிமுறைகளில் எதிரியை வீழ்த்த வேண்டும் என்பதை மிகத் தெளிவாக, விளையாட்டின் மூலமே நமது சந்ததியினருக்கு எடுத்துரைத்ததோடு, இறை விளையாட்டாகவும் அதை பிரகடனப் படுத்தியுள்ளனர்.

சதுரங்கங்கத்தின் பிறப்பிடமான தமிழகத்தில், சதுரங்க விளையாட்டின் தலைவியாக அம்மனையே போற்றி யுள் ளனர், சதுரங்க விளையாட்டின் மூலம் அம்மனை தோற்கடித்த பின்பே சிவ பெருமான் அம்பாளை கரம்பிடித்ததாக புராண இதிகாசத்தின் மூலம் எடுத்துரைத்து, சதுரங்க விளையாட்டை நமது கலாச்சாரத்துடன் கலந்து வைத்துள்ளனர்.

**சதுரங்க விளையாட்டு வீரனாக திகழ்ந்த முருகன்**

சதுர் + அங்கம் = சதுரங்கம் நான்கு பக்கங்களைக்கொண்ட ஒரு பலகையில் விளையாடப்படும் இந்தவிளையாட்டானது போரை அடிப்படையாகக்கொண்ட ஒரு போர் விளையாட்டாகும்.

தென் தமிழகத்தை எடுத்துக் கொண்டால் "வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்றே" என்ற தொல்காப்பிய வரிகளில் வரும் "வல்" என்ற சொல்லானது இன்றைய சதுரங்கத்தின் சங்ககாலப் பெயராகும்.

மேலும் "கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய" என்ற அகநானூற்றின் வரிகள் சங்ககாலத்தில் இவ்விளையாட்டு நிலைபெற்றிருந்ததைத் தெளிவாக உணர்த்துகிறது. மேலும் "வல்லுப் பலகை" என்ற பெயர் கலித்தொகையில் வருவதால் பலகை போன்ற அமைப்பு செய் யப்பட்டு அதன்மீது



இவ்விளை யாட்டை விளையாடியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது..!

SPAIN நாட்டைச் சேர்ந்த "லூயிஸ்ராமிரேஸ்" என்பவர் (CHESS) சதுரங்கம் எப்படி விளையாட வேண்டும் என்று "Repetition of Love and the Art of Playing Chess" என்றநூலை எழுதியபோதுதான், இந்த விளை யாட்டு தோன்றிய இடம் எது என்ற தேடுதல் ஆரம்பமானது.

அதுவரை வெளிநாட்டினருக்கு சதுரங்க விளையாட்டு தோன்றியது பாரததேசம் என்பதை அறியாமலேயே இருந்தனர்.

2019 ஆம் ஆண்டு "குஜராத்தின் லோதல்" பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சதுரங்கப்பலகை சிந்துசமவெளி நாகரிக காலத்தை சேர்ந்து என்று அறிஞர்கள் குறிப்பிடுவதையும், கீழடியில் கிடைத்த சதுரங்க காய்களைக் கொண்டும் இந்த விளையாட்டு குறைந்தபட்சம் 4,500 ஆண்டுகளுக்கு முன்பே முக்கியமாக நம் தமிழ் மண்ணில் விளையாடப்பட்டது என்பதை உறுதி செய்துள்ளனர்.

சங்கப்புலவன் குன்றம்பூதனார் எழுதிய "வல்லுப்போர் வல்லாய்" என்ற பரிபாடல் வரிகள் முருகனை வல்லாட்டத்தில் சிறந்தவனே என்று புகழ்கிறது. "வல்லு" என்பது போரை மையமாகக்கொண்டு சங்ககாலத்தில் விளையாடப்பட்ட ஒரு விளையாட்டு என்பது இதன்மூலம் உறுதியாகிறது. இந்த வல்லு விளையாட்டுதான் இன்று சதுரங்கம் என்ற பெயரில் உலகம் முழுவதும் விளையாடப்படுகிறது. இதுவே கீழடியிலும், சிந்துசமவெளி நாகரிக காலங்களிலும் விளையாடப்பட்டு இவ்விளையாட்டின் பிறப்பிட மாக "பாரதமே" முன் நிற்கிறது.


இதை இன்னும் ஆழ்ந்து மெய்ப்பிக்கும் வகையில் சதுரங்க விளையாட்டுக்கான ஒரு கோவிலையே பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே நமது தமிழகத்தில் அமைத்துள்ளனர்.

இத்தலத்தில்தான் சிவபெருமானும், அம்பாளும் சதுரங்கம் விளையாடியதாக கூறப்படுகிறது.

| | |
|---|---|
| புராண பெயர்: | திருப்பூவனூர் |
| பெயர்: | திருப்பூவனூர் சதுரங்க வல்லபநாதர் திருக்கோயில். |
| ஊர்: | பூவனூர் |
| மாவட்டம்: | திருவாரூர் |
| மூலவர்: | சதுரங்க வல்லபநாதர், சதுரங்க வல்லபேசுவரர், புஷ்பவன நாதர். |
| தாயார்: | கற்பகவல்லி, ராஜ ராஜேஸ்வரி (தனித்தனி சந்நிதிகள்) |
| தல விருட்சம்: | பலா |
| பாடல்: | தேவாரம் |
| பாடியவர்கள்: | திருநாவுக்கரசர் |

இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கிறார். சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 166 வது தேவாரத்தலம் ஆகும்.

இத்தலத்தில் இறைவனுக்கு சதுரங்க வல்லபநாதர் என்ற பெயர் ஏற்பட ஒரு சுவையான வரலாறு உள்ளது. தென்பாண்டி நாட்டு அரசன் வசுசேனன் அவன் மனைவி காந்திமதி ஆகியோருக்குவெகு காலமாக





குழந்தை இல்லை. நீண்ட நாட்களாக அவர்கள் சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.

இறைவன் அவர்களுக்கு அருள முன்வந்தார். அரசன் ஒருநாள் நீராடிய குளத்தில் ஒரு தாமரை மலரில் ஒரு சங்கைக் கண்டான். இறைவன் திருவருளால் உமாதேவியே அவர்களுக்கு மகளாகப் பிறக்க அங்கு சங்கு ரூபத்தில் தென்பட அரசன் அச்சங்கை கையில் எடுத்தவுடன் அது ஒரு அழகிய பெண் குழந்தையாக உருவெடுக்கக் கண்டு மிகவும் மனம் மகிழ்ந்து அக்குழந்தைக்கு ராஜராஜேஸ்வரி என்று பெயரிட்டு அருமை பெருமையுடன் வளர்த்து வந்தான்.

சப்த மாதர்களில் ஒருவரான சாமுண்டிதேவி அக்குழந்தைக்கு வளர்ப்புத் தாயாக வர ராஜ ராஜேஸ்வரி சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று வளர்ந்தாள். குறிப்பாக சதுரங்க விளையாட்டில் மிகவும் புகழ் பெற்று எல்லோரையும் வென்று விளங்கினாள். அரசன் மகளுக்கு மணம் முடிக்க வேண்டி, தகுந்த வரன் அமைய வேண்டும் என்ற நோக்கில் மகளை சதுரங்க விளையாட்டில் வெல்பவருக்கே மணமுடிப்பது என்று தீர்மானித்தான்.

பல அரசகுமாரர்கள் வந்தனர். அனைவரும் சதுரங்க ஆட்டத்தில் அவளிடம் தோற்றுப் போனார்கள். மன்னன் யாராலும் மகளை வெல்ல முடியவில்லையே என்று வருத் தப்பட்டு, இறைவன் மீது பாரத்தைப் போட்டு தலயாத்திரை மகளுடன் கிளம்பிச் சென்றான். அநேக சிவஸ்தலங்களை தரிசித்துவிட்டு திருப்பூவனூர் வந்து சேர்ந்தான். இறைவன் புஷ்பவனநாதரை வழிபட்டு கவலையுடன் தன் இருப்பிடம் திரும்பினான்.



அழகுராஜா

மறுநாள் காலை ஒரு வயோதிகர் அரசனைத் தேடி வந்தார். ராஜராஜேஸ்வரியைப் பார்த்து என்னுடன் சதுரங்கம் ஆடி உன்னால் என்னை வெல்ல முடியுமா என்று கேட்டார்.

அரசன் மகளும் சம்ம திக்க சதுரங்க ஆட்டம் துவங்கியது. அன்றுவரை இந்த ஆட்டத்தில் தோல்வியே காணாத அவள் அன்று அந்த முதியவரிடம் தோற்றுப் போனாள். அரசன் மகளை ஒருவர் வென்று விட்டாரே என்று சந்தோஷப்பட்டாலும் ஒரு வயோதிகருக்கு தன் வாக்குப்படி மகளை மனம் முடிக்க வேண்டுமே என்று கவலைப்பட்டான். உள்ளம் உருக சிவபெருமானை தியானித்தான். கண் சிமிட்டும் நேரத்தில் அங்குள்ள முதியவர் மறைந்து அங்கே சிவபெருமான் நிற்கக் கண்டான்.

இதனால் மகிழ்ந்த மன்னன் தன் மகளை இறைவனுக்கு மணமுடித்து கொடுத்தார். இதனால் இத்தலத்து இறைவன் சதுரங்க வல்லப நாதர் எனப்படுகிறார்.

மன்னார்குடி நீடாமங்கலம் சாலையில் மன்னார்குடியில் வடக்கே இருந்து சுமார் 12 கி.மி. தொலைவிலும், நீடாமங்கலத்தில் இருந்து தெற்கே சுமார் 4.5 கி.மி. தொலைவிலும் இத்தலம் இருக்கிறது.

திருவாரூர் நீடாமங்கலம் மன்னார்குடி செல்லும் பேருந்தில் ஏறிப் பூவனூர் நிறுத்தத்தில் இறங்கி, பாமணி ஆற்றைக் கடந்து சிறிது தூரம் சென்றால் கோயிலை அடையலாம்.

இவ்வாலயம் தினந்தோறும் காலை 730 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 430 மணி முதல் இரவு 730 மணி வரையிலும் திறந்திருக்கும்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி


நமது உடலில் உள்ள கால்களைப் பற்றி குறிப்பிடும்போது காலில் உள்ள விரல்கள், நகங்கள், முழங்கால், உள்ளங்கால் என்று நாம் வேறுபடுத்திக் பார்க்க முடியும். விரல்களிலும் கட்டை விரல் சுண்டு விரல் நடு விரல் என்று குறிப்பிட்டு பிரித்துப் பார்க்க முடியும். நமது ஸ்தூல சரீரத்தில் உள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் வேறுபட்டு காணப்படும். கைகளைப் போன்று கால்கள் உறுப்புகள் இருப்பதில்லை. ஒவ்வொரு உறுப்பும் வேற்றுமையுடன் காணப்படுகிறது. ஒரு பொருளை தெளிவாக வேறுபடுத்திக் காண்பதை விகல்பம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் தோன்றுவதற்கு எது காரணமாக இருந்ததோ அது காரணம் சரீரம் ஆகும். காரண சரீரத்தை நிர்விகல்பம் என்று சாஸ்திரம் கூறுகிறது. காரண சரீரத்தை ஒரு விதைக்கு ஒப்பிடலாம். விதை உறக்கம் என்று அறிவியல் பாடத்தில் படித்திருப்போம். விதைக்கு தகுந்த சூழ்நிலை வரும்போதுதான் தன்னுள் இருக்கும் சக்தியை அது வெளிப்படுத்தும். அதாவது விதை தன் சக்தியை மரமாகவோ செடியாக கொடியாகவோ வெளிபடுத்தும்.

ஒரு மா மரத்தை எடுத்துக்கொண்டால் அதில் விகல்பம் இருக்கிறது எப்படி என்றால், மரத்தில் காணப்படும் வேர்கள், தண்டு பகுதி கிளைகள் இலைகள் பூ காய் கனி என தனித்தனியாக வேற்றுமைப்படுத்தி தெளிவாக நாம் பார்க்க முடியும். அதாவது ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படுகிறது.

மாங்கொட்டையைப் பார்த்து அது மா மரம் என்று கூற முடியுமா? அல்லது அதில் மா மரத்தில் காணப்படும் வேர்கள், கிளைகள், இலை, பூ ,கனி போன்ற பகுதிகளைக் காண முடியுமா? முடியாது. ஆனால் மா மரம் உண்டாவதற்குக் காரணம் மாங்கொட்டையாகும் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும். அந்த மாங்கொட்டை மா மரம் உண்டாவதற்கு உரிய சக்தியை தனக்குள் மறைத்து வைத்துள்ளது. அதாவது மாங்கொட்டைக்குள் மரம் வேர் பூ தண்டு காய் கனி ஆகியவை ஒடுங்கி இருக்கிறது. அவ்வாறு வேற்றுமையற்ற தன்மையில் இருப்பதை நிர்விகல்பம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நிர்விகல்பம் என்றால் வேற்றுமையற்றது. விதைக்குத் தகுந்த தட்பவெப்ப நிலை கிடைத்தவுடன் தனது சக்தியை வெளிபடுத்துகிறது. அவ்வாறு வெளிபடுத்தும்போது காய் கனி பூ என்று வேறுபடுத்திக் காட்டுகிறது. மாமரம் உண்டாவதற்கு காரணமாக இருப்பது மாங்கொட்டை ஆகும். அந்த விதையைப் போன்றதுதான் காரண சரீரம் ஆகும். வேறுபாடு அற்ற சக்தியை தன்னகத்தை வைத்துள்ளது அந்த மாங்கொட்டை. காரண சரீரமும் அதன் தன்மையை அதாவது சக்தியை மாங்கொட்டைக்குள் மரம், கிளை, காய் கனி போன்றவை ஒடுங்கி இருப்பது போன்று காரண சரீரம் வேற்றுமையற்று ஒடுங்கி இருக்கிறது. வேற்றுமையற்று காணப்படும் தன்மையை உடையது காரண சரீரம் ஆகும்.



மனிதன் மூன்றுவிதமான அவஸ்தைகளில் இருக்கிறான். மனிதனுடைய அவஸ்தையை விழிப்பு நிலை, கனவு நிலை மற்றும் ஆழ்ந்த உறக்கநிலை அல்லது அமைதி நிலை என்ற மூன்று நிலைகள் என சாஸ்திரம் கூறுகிறது.

மனிதனுடைய விழிப்புநிலை என்பது அவன் படுக்கையில் படுத்திருப்பான். அவன் கண் இமைகள் மூடியிருக்கலாம்.

ஆனால் உலக தொடர்பில் அவன் மனம் இருந்து கொண்டே இருக்கும். அதாவது ஏதாவது சிந்தனைகளில் குழப்பான நிலையில் இருந்து கொண்டே இருக்கும். இந்த நிலையை விழிப்பு நிலை என்று கூறலாம்.

கனவுநிலை என்பது மனிதன் கண் இமைகள் மூடி இருக்கும். உலகத் தொடர்பு எதுவும் இல்லாமல் இருப்பான். ஆனால் அவனது மனம் பலவிதமான சிந்தனைகள் செயல்பாடுகள் அவன் விழித்துக்கொண்டு இருக்கும்போது உள்ள செயல்பாடுகள் சிந்தனைகள் எல்லாம் தோன்றுவதுபோல் இருக்கும். ஆனால் ஸ்தூல உடல் அசைவற்று இருக்கும். ஆனால் அவன் மனம் செயல்பாடுகளில் ஈடுபடுவதுபோன்று தோன்றுவது மாயத்தோற்றம் கனவுநிலை ஆகும். கனவில் மனிதன் விழிப்புநிலையில் இருப்பதுபோல் உறக்க நிலையில் செயல்பாடுகள் காட்சிகள் போன்றவை தோன்றும். அவன் ஸ்தூல உடல் அசையாமல் இருக்கும். ஆனால் அவனது மனம் சிந்தனை, செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்.

கனவுநிலையில் மகிழ்ச்சி, சோகம் போன்ற நவரசங்களையும் உறக்கத்தில் மனதால் மட்டும் மனிதன் அனுபவவிக்க முடியும். எடுத்துக்காட்டாக கனவில் மனிதன் உயரமான மலையில் ஏறுவான். கடலைத் தாண்டுவான். வானில் பறப்பதுபோல்கூட தோன்றும். இதுபோன்ற நிறைவேறிய, நிறைவேறாத ஆசைகள் எல்லாம் மனிதன் கனவு நிலையில் கண்டு களிப்பான். அதாவது அவன் உடல் உறக்க நிலையில் இருக்கும். அவன் உலக விசயங்களில் எண்ணங்களில் நினைவுகளால் கற்பனையில் உலாவிக் கொண்டிருப்பான். அந்த நிலை கனவுநிலை ஆகும்.

சுருக்கமாக கனவுநிலையை நாம் கானல்நீருக்கு ஒப்பிடலாம். பாலைவனத்தில் வெகுதொலைவில் தண்ணீர் இருப்பதுபோல் தோன்றும். அருகில் சென்று பார்த்தால் தண்ணீர் அந்த இடத்தில் இருப்பது இல்லை. அதுபோல்தான் கனவுநிலையில் செயல்பாடுகள் காட்சிகள் எல்லாம் உண்மையாக இருப்பதுபோல் நமக்குத் தோன்றும். கண்விழித்துப் பார்க்கும்போது காட்சிகள் செயல்பாடுகள் எதுவும் இருப்பதில்லை.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

விழிப்பு நிலை, கனவு நிலையைக் கடந்து மனம் எந்தவிதமான சிந்தனைகள் எண்ணங்கள், செயல்பாடுகள் எதுவுமின்றி இருக்கும் அமைதி நிலைதான் ஆழ்ந்த உறக்கம். மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது என்பது காரண சரீரத்தில் அவன் ஒடுங்கி விடுகிறான் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆழ்ந்த உறக்கம் என்பது எந்தவிதமான சிந்தனைகள் குழப்பங்கள் செயல்பாடுகள் அற்ற நிலைதான் ஆழ்ந்த உறக்கம்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஆழ்ந்த உறக்கத்தில் உலக விசயங்கள் எதுவும் நாம் உணர்வதற்கு முடியாது. அதாவது நான் உயர்ந்தவன், தாழ்ந்தவன், அழகானவன், ஏழை, பணக்காரன் போன்ற ஏற்றத்தாழ்வுகள் எதுவும் ஆழ்ந்த உறக்கத்தில் நமக்கு வருவதில்லை. ஆழ்ந்த உறக்கம் என்பது மனிதன் காரண சரீரத்தில் ஒடுங்கி விடுகிறான். பொதுவாக ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறான் என்றால் அவன் மனம் ஓரளவுக்கு அமைதியில் இருக்கிறது என்று உணர்ந்து கொள்ளலாம்.

ஸ்தூல, சூக்ம சரீரங்கள் தோன்றுவதற்கு எது காரணமாக இருந்ததோ அதுதான் காரண சரீரமாகும். ஒன்றைப்பற்றி விளக்க வேண்டுமானால் அதில் சிறப்பான குணங்கள் ஏதும் இருந்தால்தான் அதனைப்பற்றி விரிவாகக் கூற முடியும். எடுத்துக் காட்டாக யோக நிலையில் இருக்கும் தட்சிணாமூர்த்தியின் வடிவத்தை எடுத்துக் கொள்வோம். அவருடைய குமிழ் சிரிப்பு , இமைகள் மூடி தியான யோகத்தில் இருப்பது, கால்களை மடக்கி யோக நிலையில் இருப்பது, சின்முத்திரை போன்றவற்றை ஒவ்வொன்றாக விளக்குவதற்கு முடியும். ஆனால் லிங்க வடிவில் இருந்தால் விளக்குவதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியாது. தட்சிணாமூர்த்தியின் தெய்வீக ரூபத்தை விளக்குவதுபோன்று லிங்கவடிவத்தை விரிவாக விளக்க முடியாது.

நித்யா என்ற தத்துவத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது என்று சாஸ்திரம் கூறுகிறது. எந்த ஒன்று விவஸ்தையற்றதோ அது நித்யா. விவஸ்தை என்றால் உலக வழக்கில் அறிவில்லை என்ற அர்த்தம் ஆகும். ஆன்மீக வழியில் விவஸ்தை என்பது 'இருக்கு' என்றும் கூறமுடியாது. 'இல்லை' என்றும் கூறமுடியாது. காரண சரீரத்தை நித்யா என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக தூரத்தில் தெரியும் வளைந்து நெளிந்து கிடக்கும் கயிற்றை பாம்பாக நினைத்துப் பார்ப்பதுபோன்றதாகும். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர்**
**பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நமது இதழ் வளர்ச்சிக்கு உதவ விருப்பமுள்ள வாசக அன்பர்கள்

## விருப்ப சந்தா செலுத்தலாம்

எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.

விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள்
UPI & வங்கி எண் வாயிலாகவும்
சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)